பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 31 புதன்கிழமை 14.06.2023 கதிர் 215

# தவறான பாதையில் செல்கின்றார் ரணில்

## தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் விடயத்தில் பிவித்துரு ஹெல உறுமய கட்சி கடும் எச்சரிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவறான பாதையில் செல்கிறார் என்று எச்சரித்தார் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பதவி விலகியமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். கோட்டேயில் உள்ள தனது கட்சித் தலைமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

வடக்கின் அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி அடிபணிந்துள்ளார். அந்த தொல்பொருள் இடங்களை விடுவித்தால் 2 ஆயிரம் வருடங்களுக்கு மேலான உலக மரபுரிமைகள் அழிவடையலாம்.

சிங்கள, பௌத்த மரபுரிமைகளை அச்சுறுத்துலுக்குள் தள்ளி ஜனாதிபதி தேர்தலுக்குரிய வாக்குகளை பெற்றுக்கொள்வற்கு ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சிக்குள் உட்கட்சிப் பூசலுக்கு எப்போதும் குறையிருப்பதில்லை. அந்தக் கட்சி தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே இந்த நிலை நீடித்து வருகின்றது. இதனைத் தலைவர்கள் உட்கட்சி ஜனநாயகம் என்று அழைத்துக்கொண்டாலும், இதனைக் கட்சித் தலைமைகளின் ஆளுமைக் குறைபாடு என்று விமர்சிப்போரும் இல்லாமல் இல்லை. ஒருவேளை தமிழ் அரசுக் கட்சிகுள் இருப்பது மிதமிஞ்சிய உட்கட்சி ஜனநாயகமோ என்னவோ. எப்படியிருந்தாலும் என்னைப் போன்ற பத்திரிகையாளர்களுக்குத் தீனிபோடுவதில் அந்தக் கட்சிக்கு நிகர் வேறில்லை எனலாம்.

தற்போது அந்தக் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவர் குகதாசன் பதவி நீக்கம்தான் பரபரப்பான செய்தியாக இருக்கின்றது. அவரைக் கட்சியின் மாவட்டத் தலைவர் பதவியில் இருந்து நீக்கிவிட்டார்கள் என்று ஒரு கதை கடந்த சில தினங்களாக உலாவந்தது. அதனால் கட்சிக்குள்ளேயே குதூகலித்துக் கொண்டாடி எழுதியவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதாவது குகதாசனை மாவட்டத் தலைவர் ☞2

## இந்த ஜன்மத்தில் மக்கள் ஆணை ஜனாதிபதி ரணிலுக்கு கிடையாது

### சாடமிடுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த ஜன்மத்தில் மக்கள் ஆணை கிடையாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பதவி விலகியமை தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் (விமல் வீரவன்ஸவின் கட்சி) தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தொல்பொருள் சின்னங்கள் அதிகளவில் அழிக்கப்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தொல்பொருள் அழிப்பு ☞2

## ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியும் போட்டி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவை அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் மீண்டும் வேட்பாளராக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மருதானையில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் தொழிற்சங்கங்களுடன் செவ்வாய்க் கிழமை பேச்சு நடத்தினோம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வென்றெடுத்த தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கடுமையாக எதிர்க்கின்றோம்.

நாளைய தினம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ள புதிய தொழில் சட்டமூலத்தின் ஊடாக வேலை செய்யும் நேரத்தை 8 மணி நேரத்தில் இருந்து 12 நேரமாக அதிகரிக்கவும் வேலை செய்யும் நாட்களை 4 ஆக குறைக்கவும் யோ ☞2

## தங்கம் கடத்திவர முயன்ற நால்வர் தமிழ்நாட்டில் கைது

(ந.லோகதயாளன்)

தமிழகம் தங்கச்சிமடத்தில் இருந்து மன்னார்ப் பகுதிக்கு வந்து தங்கம் ஏற்றிச் செல்ல முயன்ற தமிழக படகு ஒன்றைத் தாம் கைப்பற்றியுள்ளனர் என்று தமிழ்நாடு பொலிசார் தெரிவித்தனர். படகில் இருந்த நால்வர் தப்பியோட முயன்றபோதும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கச்சிமடத்தில் இருந்து புறப்பட்டுச் சென்று மன்னார் கடற்பகுதியில் வைத்து தங்கத்தைக் கைமாற்றிக்கொண்டு திரும்புவதே இவர்களின் திட்டம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது குறித்துக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் படகினை திங்கட்கிழமை மாலை 2 மணிக்குத் தாம் மடக்கினர் என்கின்றனர் அதிகாரிகள். .

படகில் இருந்து கைது செய்யப்பட்டவர்கள், ☞2

## நலன்புரி உதவிகள் ஜூலை முதல்

நலன்புரி உதவிகளைப் பெறும் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் ஜூலை மாதம் முதல் வழங்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த பின்னர், நாடாளுமன்றத்தில் புதிய மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். .

அனுராதபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் பொருளாதாரப் பின்னடைவுகளை உடைய சுமார் 95 சதவீதமான பயனாளிகளின் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கெனப் பொறுப்பு வழங்கப்பட்ட ☞2 குழு அதனை

## ஜனாதிபதி செயலகம் மறுப்பு

இலங்கை மக்களில் சுமார் 75 இலட்சம் பேர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் கொள்கிறார்கள் என்று வெளியான ஊடக அறிக்கைகளுக்கு ஜனாதிபதி செயலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு வேலைத் திட்டம் மற்றும் உணவு பாதுகாப்பு, விவசாய அமைப்பு ஆகியவை இணைந்து மேற்கொண்டுள்ள உணவு பாதுகாப்பு தொடர்பிலான மதிப்பீட்டு அறிக்கை இலங்கையின் உணவு பாதுகாப்புச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுவதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

உலக உணவு வேலைத் திட்ட உதவிச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமுமான கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன 2023 மே 24 வெளியிடப்பட்ட உணவு பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலேயே மேற்கண்டவாறு ☞2

## பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மதுவரியால் 2022ஆம் ஆண்டே அதிகூடிய வருமானம் கிட்டியது

### திணைக்களத் தரவுகள் தெரிவிப்பு

2022ஆம் ஆண்டு இலங்கை மதுவரித் திணைக்களம் வரலாற்றில் அதிகூடிய வருமானத்தினைப் பெற்றுள்ளதாக தரவுகள் பதிவாகியுள்ளன.

2022ஆம் ஆண்டு இலங்கைக்குப் பெரும் சவாலான ஆண்டாக இருந்தது. கொரோனா வைரஸ் தாக்கத்தின் தொடர்ச்சி, பொருளாதார நெருக்கடி, ஆட்சிக்கு எதிரான தொடர் போராட்டங்கள், மின்வெட்டு, பணவீக்கம், எரிபொருள் தட்டுப்பாடு எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாடு முகங்கொடுத்திருந்தது.

இத்தனைக்கு மத்தியிலும் இலங்கை மதுவரித் திணைக்களம் அதிகளவான வருமானத்தை கடந்த வருடம் பெற்றுள்ளமையானது ஆச்சரியமான விடயம் என்று அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்..

மது வரித் திணைக் களத்தின், கடந்த வருடம் வருமானமாக 170 பில்லியன் ரூபாய். நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட இது 10 பில்லியன் ரூபாய் குறைவு என்கிறபோதும், திணைக்களம் பெற்ற அதிகூடிய வருவாய் இதுவேயெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, கடந்த வருடம் மதுவரித் திணைக்களத்தின் ஊடாக அரசுக்குக் கிடைத்த வருமானம் 20.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் மாத்திரம் 35 ஆயிரத்து 381 சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு ☞2

## 10 நாள்களில் ஜனாதிபதி முல்லைத்தீவு வருகிறார்

(ந.லோகதயாளன்).

இன்னும் 10 நாள்களில் முல்லைத்தீவில் இடமபெறவுள்ள நடமாடும் சேவையில் பங்குகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவிற்கு வருகை தருகின்றார்.

ஜனாதிபதி செயலகத்தின் நடமாடும் சேவை ஜூன் 24, 25 ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளது. இதில் பங்குகொள்ளவே ஜனாதிபதி நேரில் முல்லைத்தீவுக்கு வருகின்றார்.

இந்த ☞2 நடமாடும் சேவை

## உற்பத்தியை அதிகரிப்பதே முட்டை விலை குறைய வழி

### அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

உள்நாட்டில் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதே, முட்டை விலை தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கான ஒரே தீர்வு என்று அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண் ☞2

## கதிர்காமம் ஆடிவேல் உற்சவத்திற்காக கிழக்கிலிருந்து பக்தர்கள் அணிவகுப்பு



(அகீல்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்திற்காக கிழக்கு மாகாணத்தின் பல்வேறு தமிழ்ப்பிரதேசங்களிலிருந்தும் பக்தர்கள் பாதயாத்திரையாக கதிர்காமம் நோக்கி அணி வகுத்து வருகின்றனர்.

கதிர்காமத்திற்கான குமுண தேசிய பூங்கா ஊடான காட்டுப்பாதை கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டதையடுத்து பக்தர்கள் பெருமளவில் இக்காட்டுப்பாதையூடாக கதிர்காமம் நோக்கி ☞2

## முல்லைத்தீவில் விடுவிக்கப்படவுள்ள 21 ஆயிரம் ஏக்கரில் இன்று அளவீடு

### அதிகாரிகள் குழு நடவடிக்கை

ந.லோகதயாளன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டு வனஉயிரிகள்திணைக்களம் கையகப்படுத்வெளியீடுசெய்த வர்த்தமானி அறிவித்தலை இல்லாது செய்யும் நோக்கில், விடுவிக்கப்படவுள்ள காணிகளை அளவிடும் பணிகள் இன்று இடம் பெறவுள்ளது.

சுண்டிக்குளம் தேசிய பூங்கா வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டபோது 19 ஆயிரத்து 565 கெக்டேயர் அல்லது 48 ஆயிரத்து 347 ஏக்கர் பிரதேசத்தை வன உயிரிகள் திணைக் களத்திற்குரியது என்று தெரிவிக்கப்பபட்டது. ஆனால் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் சுண்டிக்குளம் பகுதியில் 11 ஆயிரத்து 149 கெக்டேயர் அல்லது 27 ஆயிரத்து 550 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே தேசிய பூங்காவாக இருந்தது. சுமார் 21 ஆயிரம் ஏக்கர் நிலம் மேலதிகமாக வர்த்தமானி மூலம் வனஉயிரிகள் திணைக்களத்துக் குரித்தாக்கப்பபட்டபோது அதற்குள் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 16 ஆயிரம் ஏக்கர் நிலமும் அகப்பட்டுக் கொண்டது.

குடியிருப்பு மற்றும் விவசாயக் காணிகளாகக் காணப்பட்ட இந்த நிலங்களுக்குள் நுழையவும் விவசாயம் செய்யவும் இந்த வர்த்தமானி அறிவித்தல் தடையாக இருந்தது. இதனால் தமது நிலத்தை வனஉயிரிகள் திணைக்களத்திடம் இருந்து விடுவித்துத் தருமாறு நிலத்தைப் பறிகொடுத்த மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையைத் ☞2

## துணைவேந்தராக வர விரும்புபவருக்கு 'நாரா' பணிப்பாளர் சபையில் நியமனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்த பேராசிரியர் வினோபா திடீரென திங்கட்கிழமை தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றம் அபிவிருத்தி நிறுவனத்தின் (நாரா) பணிப்பாளர் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்றொழில் அமைச்சின் கீழ் இருக்கும் நாரா ஆய்வுநிறுவனத்திற்கே புதிய பணிப்பாளர் சபை உறுப்பினராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தர. பதவிக்கு அவர் விண்ணப்பித்திருந்த நிலையில் இந்தத் திடீர் நியமனம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பதவியில்இருந்துநீக்கியதன் மூலம் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் கட்சிக்குள் மீண்டும்தனதுஅதிகாரத்தை நிலைநாட்டி, மாவை சேனாதிராசாவைத் தொடர்ந்தும் தலைவராக வைத்திருக்கப் போகிறார் என்றும் இது தலைமைப் பதவியை எதிர்பார்த்திருக்கும் சிறிதரன், சுமந்திரனுக்கு விழுந்த அடியென்று அந்த அணியினர் குதூகலித்திருந்தனர். எழுதிக் கொண்டாடினர்.

இருந்தாலும் அவர்களின் அற்ப ஆசை நீண்ட நேரம் நீடிக்கவில்லை. ஏனெனில், உண்மையில் குகதாசன் கட்சியின் மாவட்டக் கிளைத் தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்படவில்லை. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் சார்பில் - அவரது இடத்தில் - நிகழ்ச்சிகளுக்கும், கூட்டங்களுக்கும் கலந்துரையாடல்களுக்கும்அதிகாரபூர்வ பிரதிநிதியாகச் செல்வதற்கு அவருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தை - கடிதத்தைத்தான் சம்பந்தர் திரும்பப் பெற்றிருந்தார். அதாவது தனது பிரதிநிதியாக குகதாசனுக்கு சம்பந்தர் வழங்கியிருந்தநியமனத்தை அவர்இரத்துச்செய்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் என்று வகையில் சம்பந்தர் வழங்கிய நியமனம் அது. அதற்கும் கட்சிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. கட்சிப் பதவியில்குகதாசன்இன்னும் தொடர்கிறார். அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்றால் மாவை சேனாதிராசாதான் அதனைச் செய்யமுடியும்.

இத்தனைக்கும் குகதாசன் பெருந்தலைவர் இரா.சம்பந்தனால் அரசியலுக்குக் கைபிடித்து அழைத்துவரப்பட்டவர்தான். கனடாவில் வாழ்ந்தவரான குகதாசனை திருகோணமலைக்கு வரவழைத்து கட்சிப் பணிகளை வழங்கியவர் சாட்சாத் சம்பந்தரேதான். கிட்டத்தட்ட சம்பந்தரின் அரசியல் வாரிசாகவே அவர் மாறியிருந்தார். கட்சியில் பணிகளைப் பொறுப்பெடுத்த பின்னர் அவர்பலபணிகளைஆற்றியிருக்கிறார். குறிப்பாக கட்சியின் மூலக் கிளை, தொகுதிக் கிளைகளை மறுசீரமைத்துப் புதுப் பொலிவு பெற வைத்திருக்கிறார். கட்சிக்குள் ஒரு உத்வேகத்தைக் கொடுத்துள்ளார். அதனைச் சாத்தியமாக்குவதற்கு அவர் பல சமயங்களில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்துள்ளார். முதுமை, நோய் காரணமாக இரா.சம்பந்தரின்முடக்கமும் குகதாசனின் எழுச்சியும் திருகோணமலையில் ஒருசேரநிகழ்ந்தன.அதனால் திருகோணமலையின் அடுத்த அரசைக்க முடியாத அரசியல் தலைவராகவே குகதாசன்வளர்ந்துநின்றார்.

அதுதந்த மமதையோ அல்லது அந்த வளர்ச்சி மற்றவர்களுக்குத் தந்த பயமோ, வழக்கம் போல கட்சிக்குள்அவருக்குஎதிரான குத்துவெட்டுக்களுக்குநெய் ஊற்றி வளர்த்தது. அதற்கு வாய்ப்புக்களைஏற்படுத்திக் கொடுப்பதைப் போல அவரும்நடந்துகொண்டார். ஒருகட்டத்தில் இரா.சம்பந்தனையே புறக்கணித்து, அவரது அறிவுரைகளைச் செவிமடுக்காமல் நடந்து கொள்ளும் நிலையை எட்டினார். உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் பக்கம் அவர் சாய்ந்து நின்று வேட்பாளர்தெரிவைமேற்கொண்டமையும் அவருக்கு எதிரான வன்மத்தை மேலும் வளர்த்து. இந்த விடயத்தில் கட்சியின் மூத்த தலைமையைக்கூட அவர் உதாசீனம் செய்தார். வேட்பாளர் குளறுபடி தொடர்பில் அவருடன் பேசுவதற்கு பெருந் தலைவர் முயன்றபோது - அழைப்பெடுத்தபோது - அவற்றுக்குப் பதிலளிக்காமல் தவிர்த்தார் என்ற குற்றச்சாட்டும்கூட உண்டு.

அது தவிர அவர் மீது கட்சிக்காரர்களால் வேறும் ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் முக்கியமாகப் பெருந் தலைவர் சம்பந்தனின் மகனுக்குப் பிடிக்கும் வகையில்அவர்நடந்துகொள்ளவில்லைஎன்றும்ஒருகதை இருக்கிறது. இவையெல்லாம் சேர்ந்துதான் அவரைத் தனது பிரதிநிதி என்ற நிலையில் இருந்து சம்பந்தர் தூக்கியெறியும் நிலையை ஏற்படுத்தியது.

இதனையே அவர் கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்று எண்ணிக் குதூகலித்துக் கொண்டிருக்கிறது சுமந்திரன் எதிர் முகாம். இந்த வேடிக்கை வினோதங்கள் எல்லாம் எந்தளவு தூரத்திற்கு இன்னும் செல்கின்றன என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**

## நலன்புரி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியாகவும், நம்பகரமாகவும் வெளிப் படைத் தன்மையுடனும் செய்து முடித்துள்ளது.

இந்தப்பட்டியலில்தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கருதப்படுபவர்கள் முறைப்பாடுகளைச் செய்வதற்கும் மீளாய்வுக்கும் ஏற்பாடுகள் உள்ளன - என்றார்.

இதேநேரம்,பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களை ஜனாதிபதி கூட்டத்திற்கு அழைத்தது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, அவ்வாறு அழைக்கப்பட்டது குறித்துத் தான் அறிந்திருக்கவில்லை என்றார்.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நாங்கள்தான் நாடாளுமன்றத்தில் வாக்களித்தோம். அப்போது காணப்பட்ட நிலைமைக்கு அமைய நாட்டைக் கட்டியெழுப்ப பொருத்தமான நபர் என்ற வகையில் ரணில் விக்ரமசிங்க வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்டார். அவரை தெரிவு செய்தது சரி எனப் பொதுமக்கள்கூட ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எப்படியான கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் அனைவரும் இணைந்து பொது நோக்கத்தில் ஒன்றாகச் செயற்பட்டதால், மக்களின் பிரச்சினைகள் பெரும்பாலும் குறைந்துள்ளன. எதிர் காலத்தில் மேலும் குறையும்.

நாட்டின் பொருளாதாரம் தற்போது முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் கடனை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை எம்மால் உருவாக்க முடியாது.

கடந்த காலத்தில் சீர்குலைந்த நாட்டின் அத்தியவசிய சேவை வழங்கல்கள் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளன. அத்தியவசியப் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. இருந்தாலும் பணவீக்கம் குறைந்துள்ளமைக்கு ஈடாகப் பொருட்களின் விலைகள் குறையவில்லை.

தற்போது அந்நிய செலாவணி கிடைத்து வருகிறது. முதல் மூன்று மாதங்களில் 76 வீதம் அந்நிய செலாவணி கிடைத்தது. சகல காலாண்டுகளிலும் அந்தத் தொகை அதிகரித்து வருகிறது. தற்போதைய அரசியல் நிலைத்தன்மையை அப்படியே முன்னெடுத்துச் செல்வது முக்கியமானது.

கொரோனா காரணமாக நாட்டில் வறியவர்கள் அதிகரித்துள்ளனர். கடந்த காலங்களில் செயற்கையான டொலரை கட்டுப்படுத்தி வைத்திருந்தன் பிரதிபலன்களை நாம் கண்டோம் - என்றார்.

## தங்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கத்தைக் கடத்தி வரவே தாம் கடலுக்குச் செல்ல இருந்தனர் என்று ஒப்புக் கொண்டுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். தங்கத்தைக் கைமாறுவதற்கான இடமாகக் குறிக்கப்பபட்ட ஆள்கூற்று புள்ளியையும் (ஜி.பி.எஸ்) இரகசிய அடையாளமாக வழங்கப்பட்ட இலங்கை 20 ரூபா நாணயத்தால் ஒன்றையும் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஜனாதிபதித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம். அதேநேரம், எமது கட்சி ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவதற்கும் தீர்மானித்துள்ளது - என்றார்.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கை மக்கள் பார்வைக்காக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு பாதுகாப்பு, விவசாய அமைப்பின் உத்தியோகபூர் இணை தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி இணையத் தளத்தில் உண்மைத்தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்படுகின்ற போதும் சில உள்நாட்டு ஊடகங்களில் வெளியிடப்பட்ட செய்திகளில் உணவு பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கையில் காணப் படும் தகவல்களுக்கு புறம்பான விடயங்கள் காணப் படுகின்றமை கவலைக்குரியது.

உணவு பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையில் இலங்கை சனத்தொகையில்17சதவீதமானவர்கள் அதாவது 39 இலட்சம்பேர்உணவுபாதுகாப்பின்மை பிரச்சினைக்கு ஆளாகியுள்ளனரென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் கடந்த வருடத்தின் ஜூன்/ஜூலை மாதங்களுடன்ஒப்பிடும்போது அந்த நிலைமை 40 சதவீத குறைவடைந்திருப்பதாகவும் உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகம்கொடுத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் 66,000 இல் இருந்து 10,000 வரையில் குறைவடைந்திருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மேற்படி விடயத்தை உணவு நுகர்வின் அதிகரிப்பாகவும் கருத முடியும் என்பதோடு, அறுவடைக் காலத்தில் விவசாய சமூகத்தினரின் குறைந்த உணவுச் செலவும் அதிக வருமானமும் இதற்கு காரணமாகும்.

உணவுப் பாதுகாப்பின்மையின் அளவு மற்றும் தீவிரம்பற்றிய துல்லியமான, விரிவானகண்ணோட்டத்தை வழங்குவதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உடனடிநிவாரணம்வழங்கத் தேவையான தகவல்களை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வழங்குவதே உணவு பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு ஆய்வின் நோக்கமாகும்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டுச் செயற்பாட்டின் ஊடாக, முழுப் பொருளாதாரச் சூழலையும் கருத்திற் கொண்டு, பெரும் மற்றும் நுண் மட்டம் இரண்டிலும் உணவுப் பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பீடுசெய்கிறது.விவசாயப் பொருட்கள், சந்தை நிலைமைகள், கேள்வி-விநியோக மற்றும்நிலைமைகள் உள்ளடங்களாக தேசிய தானியங்கள்ஃ பிரதான உணவு உற்பத்தி இருப்புப் பத்திரம் அடுத்த வருடத்தில் பிரதான உணவு பொருட்களின் இறக்குமதிக்கு அவசியமானதும் பூர்த்தி செய்யப்படாததுமான மதிப்பீடும் செயற்பாடுகளும் உள்வாங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மதுவரியால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில், 12 கோடியே 94 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய்தண்டப்பணம்கிடைத்துள்ளது.

மதுபானங்களை விற்பனை செய்ய உரிமம்பெற்ற நிலையங்களில், மதுபானங்களை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளை மீறிய 4 ஆயிரத்து 155 சம்பவங்கள் பதிவாகியிருந்தன. அவற்றினூடாக, 16 கோடியே 48 இலட்சத்து 31 ஆயிரத்து 863 ரூபா தண்டப் பணமாகப் பெறப்பட்டுள்ளது. இந்த வருடம் வருமானமாக 217 பில்லியனை ஈட்டுவதற்கு மதுவரித் திணைக்களம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

## கதிர்காமம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லத்தொடங்கியுள்ளனர். கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் உறவினர்கள், குடும்ப உறுப்பினர்களாக பெருமளவு பக்தர்கள் அம்பாறை மாவட்டம் ஊடாக தினமும் பாதயாத்திரையாக பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவர்கள் சிறு குழந்தைகளைக்கூட தோழில் சுமந்தவாறு பக்திப் பரவசத்துடன் இப்பாதயாத்திரையை முன்னெடுத்து வருவது விசேட அம்சமாகும்.

குறித்த காட்டுப்பாதை ஜூன் 27 மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இம்முறை சுமார் 45 ஆயிரம் பக்தர்கள் பாதையாத்திரையை மேற் கொள்வரென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் இருந்த நாட்டின் நெருக்கடி நிலையிலும் 2,880 பேர் காட்டுப் பாதையில்கதிர்காமம்நோக்கி பயணித்திருந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவம் ஜூன் 19 கொடியேற்றத்துடன் தொடங்கி ஜூலை 04 தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

இந்தக் கதிர்காம உற்சவ காலத்தில் அக்கரைப்பற்று கல்முனை, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், வாழைச்சேனை இலங்கை போக்குவரத்துசபை டிப்போக்கள் தினமும் சிறப்பு பேருந்து சேவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

உற்சவம் இடம்பெறும் நாட்களில் இந்தச் சேவைகள் நடைபெறும் என தெரிய வருகின்றது இதேவேளை கதிர்காமம் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அனைத்து மதுபானசாலைகளும் 16 நாட்களுக்கு மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறப்புமிக்க கதிர்காம எசலதிருவிழாவைமுன்னிட்டு அப்பகுதியில் உள்ள மதுபானக்கடைகளைமூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஜூன் 19 முதல் ஜூலை 4 வரை மதுக்கடைகள் மூடப்படவுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் எசல திருவிழா காலத்தில் திருவிழா நடைபெறும் இடத்தை மதுவற்ற பகுதி யாக மாற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஊவா மாகாண கலால் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளது.

மேலும், பக்தர்களுக்கு வெளியில்இருந்துமதுபானம் மற்றும்போதைப்பொருட்கள் கிடைப்பதை முற்றாகத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கதிர்காம பகுதியில் இடம்பெறும் போதைப்பொருள் குற்றச் செயல்கள், மதுபான குற்றங்கள் மற்றும் புகையிலை குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்காக 1913 என்ற விசேட தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலங்களும் பொதுமக்களுக்காகப் பயன்பாட்டில்இருக்கும்எனக்கலால் திணைக்களத்தின் மேலதிக கலால் ஆணையாளர் கபில குமாரசிங்கதெரிவித்துள்ளார்.

## உற்பத்திகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டவாறு குறிப்பிட்டார்.. அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முட்டை தட்டுப்பாட்டை தற்காலிகமாக போக்க ஒரு தொகையை இறக்குமதி செய்து சந்தையில் வழங்க முடியும், இது போட்டித்தன்மையை உருவாக்கும், ஆனால்ஒவ்வொருசந்தர்ப்பத்திலும் இதை முழுமையாக கட்டுப்பாட்டு விலையில் வைத்திருப்பது கடினம்

தம்மால் கொள்வனவு செய்ய முடியாத விலை இருக்கும் போது நுகர்வோர் அந்த பொருட்களை வாங்குவதை தவிர்க்க வேண்டும் என்று கூறிய அமைச்சர், நுகர்வோருக்கு அதிகாரம் உள்ளது, அதாவது சந்தையில்அதிகஆதிக்கத்தைசெலுத்தும் திறன் அவர்களுக்கு உள்ளது.

இந்த நிலைமைக்கு கேள்விதாரர் மற்றும் விநியோகஸ்தர் ஆகிய தரப்பினர் தலையிட வேண்டும். இதற்காக உணவு பாதுகாப்பு குறித்து தனி குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினை குறித்து விசேட கவனம் செலுதுவதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## முல்லைத்தீவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வலியுறுத்து வந்தனர்.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனானசந்திப்புக்களிலும்அவர்கள் இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்திவந்தனர்.அவரும் அதனை ஏற்று நிலங்களை விடுவிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். எனினும் நீண்ட காலமாக அதற்கான பணிகள் இடம்பெறாமலேயே இருந்தது. தற்போது இந்த 21 ஆயிரம் ஏக்கரல் நிலத்தையும் அளவீடு செய்து விடுவிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேபோன்றுநந்திக்கடல், நாயாறுப் பகுதிகளில் இயற்கை ஒதுக்கம் என 2015ஆம் ஆண்டு எவரது ஒப்புதலும் இன்றி வன ஜீவராசிகள் திணைக்களம் வர்த்தமானி அறிவித்தல் செய்தபிரதேசமான9ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பையும் மீள விடுவிப்பது தொடர்பில் நேரில்இடங்களைப்பார்வையிட்டு அளவீடு செய்வதற்காக இன்றைய தினம் வனஜீவராசிகள் திணைக்களம், நில அளவைத் திணைக்களம்,பிரதேசசெயலகஅதிகாரிகள்குழுகளப்பயணங்களை மேற்கொள்கின்றது.

இவ்வாறு அளவீடு செய்யப்படும் பிரதேசங்கள் மீள மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டு வர்த்தமானி வெளியீடுசெய்யப்படவுள்ளது.

## தவறான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் முயற்சிக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவறான பாதையில் செல்கின்றார். அடுத்த வருடம்ஜனாதிபதிதேர்தல்நடத்தப்படவேண்டும். ஜனாதிபதி ரணிலைப்பொறுத்தவரையில் ஜனாதிபதி தேர்தல் காலத்திற்குள் அதனைத்தும் முடிந்துவிடும் என்பதால் முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு முயற்சிக்கின்றார்.

அதற்காக அரசமைப்பு திருத்த்தினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு அரசமைப்பு திருத்தப்படுவதாக இருந்தால் 150 உறுப்பினர்களின் ஆதரவு தேவையாக உள்ளது. அதற்காகவே அவர் வடக்கு, கிழக்கு தமிழ் உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முனைகின்றார் - என்றார்.

## 10 நாள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், பிறப்பு, இறப்பு பதிவுகள் என்பவற்றை ஒரே நாளில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தை வதிவிடமாக கொண்டவர்கள் மட்டுமே இந்தச்சேவையைப்பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இந்தச்சேவையில்பயன்பெற எண்ணும் பொதுமக்கள் இதற்கான ஆவணங்களை முற்கூட்டியே பெற்று உரிய அதிகாரிகளின் ஒப்பத்தை பெறுவதன் மூலம் இந்த நடமாடும் சேவையில் ஆவணங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ளும் சந்நர்ப்பம் உள்ளதாக மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறுகின்றது. ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கதமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சின்போது, கூட்டமைப்பு உறுப்பினர்கள் வழங்கிய விடயங்களை ஏற்றுக்கொண்டு தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்கவை தாக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

குருந்தூர் அசோக விகாரைக்கு எதற்காக 300 ஏக்கர்காணிஎன்றுஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினவியுள்ளார். குருந்தூர் விகாரை ஜேதவன விகாரையை விடவும் பெரியதா, மகாவிகாரையை விடவும் பெரியதா என்று கேள்வி எழுப்புகின்றார்.

மகாவிகாரை அமைந்துள்ள காணியின் அளவிலேயே அந்த விகாரைக்கு மாகா விகாரை என்ற பெயர் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி நினைத்துக் கொண்டிருக்கின்றார்.

தெரியாத வரலாறைப் மையப்படுத்தி வெற்றுப் பேச்சுக்களைபேசிக்கொண்டு தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தினை வைத்து தொல்பொருளியல் பணிப்பாளரை அவர் விரட்டுகின்றார்.

தொல்பொருள் அடையாளக் கற்களை கழற்றுகின்றீர்களா அல்லது நானே கழற்றவா என்றும் கேட்கின்றார்? ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த ஜன்மத்தில் மக்கள் ஆணை கிடையாது.

அதேநேரம், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு கிடைத்துள்ள மக்கள் ஆணையை நடைமுறைப் படுத்தும்பொறுப்பேஅவருக்கு உள்ளது என்பதையும் நினைவு படுத்துகின்றோம் -என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மூளைச்சாவடைந்தோரின் சிறுநீரகங்களை தானம்செய்ய உறவினர்கள் முன்வவாருங்கள்

## வைத்திய நிபுணர் மதிவாணன் கோரிக்கை

மூளைச்சாவடைந்து இறந்தவரின் சிறுநீரகத்தினை தானமாக வழங்குவதற்கு உறவினர்கள் முன் வர வேண்டும் என சிறுநீரக வைத்திய நிபுணர் எஸ்.மதிவாணன் கேட்டுக்கொண்டார்.

சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு இடையில் இடம் பெறவுள்ள கிரிக்கெட் போட்டி தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

திடீரென ஏற்படும் விபத்து மற்றும் சில நோய் காரணமாக மூளைச்சாவடைந்து இறந்தவர்களின் இதயம் சில மணி நேரங்கள் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவர்களது சிறுநீரகத்தினை அறுவைச் சிகிச்சை மூலமாகத் தேவைப்படும் ஒருவருக்கு பொருத்த முடியும். அவ்வாறு சிறுநீரகங்களை வழங்குவதற்கு மூளை சாவடைந்தவரின் உறவினர்கள் முன் வந்தால் இன்னொரு உயிரைக் காப்பாற்றும் சந்தர்ப்பம் ஏற்படும். எனவே அவ்வாறு சிறுநீரகத்தை தானம் தருவதற்கு பொதுமக்கள் முன் வர வேண்டும்.

யாழ்ப்பாணத்ததில் சிறுநீரகம் செயலிழந்த ஒருவருக்கு சிறுநீரகத்தைப் பொருத்துவதற்காக கண்டி வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் சிலர் சிறுநீரகத்தை பெற்று தந்து உதவியிருக்கிறார்கள். இதனையே யாழ்ப்பாணத்தில் மூளைச் சாவடைந்தவர்களின் சிறுநீரகங்கள் கிடைத்தால் அவற்றின் மூலம் இன்னும் இரு உயிர்களைக் காக்க முடியும். அதற்காக அவர்கள் எப்பொழுதும் நன்றிக்குரியவர்களாக இருப்பார்கள். ஒரு உயிரைக் காத்த பாக்கியத்தை சிறுநீரகத்தை வழங்கியவர்களும் பெறுவார்கள்.

இது தொடர்பான விழிப்புணர் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி பிற உயிரை வாழ வைக்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்த முனவர வேண்டும் – என்றார்.

இந்த விழிப்புணரர்வை ஏற்படுத்துவதற்காக வடக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடையே சிநேகபூர்வமான துடுப்பாட்டப் போட்டி, வலைப்பந்தாட்ட போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த போட்டி யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வருடமாக நடத்தப்படவுள்ள துடுப்பாட்டப் போட்டி ஜூன் 17 காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சியாக, பெண் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடையே முதன்முதலாக வலைப்பந்தாட்ட போட்டியும் இடம்பெறவுள்ளது.




யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே போட்டி தொடர்பான விடயங்கள் அறிவிக்கப்பட்டன.

கடந்த வருடம் முதல் தடவையாக நாடாத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டியில் சட்டத்தரணிகள் அணி வெற்றி பெற்றது.(03)

# கனடா வாழ் தமிழ்ப் பெண்கள் 3 பேர் லண்டன் விபத்தில் சாவு



கனடாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்கள் மூவர் பிரித்தானியாவின் தென் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள மேற்கு சசெக்ஸ் (West Sussex) பகுதியில் இரு கார்கள் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் யாழ்ப்பாணம் – ஊரெழுவைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் அடங்குவர்.

கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஏ – 285 வீதியில் சிசெஸ்டர் (Chichester) பகுதியில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

வெள்ளைநிற பிஎம்டபிள்யூ (BMW220) மற்றும் பழுப்பு நிற மேர்சிடிஸ் (Mercedes C200) ஆகிய இரண்டு கார்கள் மோதியே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் பிஎம்டபிள்யூ காரில் பயணித்த நால்வரில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றையவர் காயங்களுடன் மீட்கப்பட்டிருக்கிறார்.

மேர்சிடிஸ் (Mercedes C200) காரில் பயணித்த மூவரும் காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சிசெஸ்டர் (Chichester) நகர் அருகே விபத்து நடைபெற்ற Duncton கிராமப்புறத்தில் வீதியில் ஆட்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டுள்ளதால், கார் விபத்து தொடர்பான நேரடி சாட்சியங்கள் இல்லாததால் பொதுமக்களின் உதவியைப் பொலிஸார் நாடியுள்ளனர்.

திருமணக் கொண்டாட்டம் ஒன்றுக்காகக் கனடாவில் இருந்து பிரித்தானியா சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். மகன் காயமடைந்துள்ளார்.

இதேவேளை, இவர்கள் பயணம் செய்த பிஎம்டபிள்யூ காரைச் செலுத்திச் சென்றதாகக் கூறப்படும் உறவினரான பெண் ஒருவரும் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

# தனியார்மயப்படுத்தல் நாட்டை பாதாளத்திற்குள்ளே தள்ளிவிடும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. காட்டம்



அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று–குறிப்பாக ரெலிக்கொம் நிறுவனத்தைத் தனியார்மயப்படுத்துவதை ஏற்க முடியாது என்று ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலாதன் தெரிவித்தார். அப்படித் தனியார்மயப்படுத்துவது நாட்டை பாதாளத்திற்குள் தள்ளிவிடும் என்றும் விமர்சித்துள்ளார்.


வவுனியாவில் நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்பேதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா ரெலிகொம் உட்பட நாட்டின் வளங்கள் தனியார்மயப்படுத்தப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது மக்களின் சொத்து. அவ்வாறான சொத்துக்களை தனியார் தலையீடு செய்து பெற்றுக்கொள்வதால் அவை வெளிநாடுகளுக்குச் செல்கின்ற சூழல்தான் ஏற்படும்.

தற்போதைய சூழலிலேயே பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்தநிலையில் எமது வளங்களை தனியாருக்கு வழங்கி அதன் ஊடாக அபிவிருத்தி காணமுடியும் என்ற சிந்தனையுடன் எடுக்கும் நடவடிக்கைகள் பாதாளத்திற்கே நாட்டைக் கொண்டு செல்லும்.

எம்மைப் பொறுத்தவரையில் மக்களின் விருப்பின் அரச

# நல்லூரில் நேற்று திருக்கல்யாணம்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகதினமாகிய நேற்று காலை முருகப்பெருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகம் இடம்பெற்றது

அதனைதொடர்ந்து நேற்று மாலை முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம் இடம்பெற்று



முருகப்பெருமான் வள்ளி, தெய்வயானை சகிதம் வெளி வீதி வளம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனியாவது தடை விலகுமா?

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பதவியில் இருந்த வந்தவரான பேராசிரியர்அநுரமனதுங்கபதவிவிலகியிருக்கிறார். இது சமூக வலைத் தளங்களில் பெரும் வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பியிருக்கிறது. அவரது பதவிக் கால ஒப்பந்தம் முடிவடைந்ததால் அவர் பதவி விலகினார் என்று பௌத்த சாசன மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். எனினும் அவரது பதவி விலகலின் பின்னணியில் உலாவும்ஒருகாணொலிபலவிதசந்தேகங்களையும் கிளப்பியுள்ளது.

தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சில் இடம்பெற்ற ஒரு காட்சிதான் அந்தக் காணொலி. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களம் பல ஆயிரம் ஏக்கர் காணிகளை உரிமை கோருகின்றது. அவற்றில் 90 சதவீதமானவையும் பௌத்த தொல்லியல் அடையாளங்களையொட்டியவை. அதாவது பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய விகாரை என்று அடையாளப்படுத்தக்கூடிய இடங்களையும் அதனைச் சுற்றியுள்ள பல நூற்றுக்கணக்கான நிலங்களையுமே அது கையகப்படுத்தி வந்தது.

இது குறித்து அரசுத்தலைவருடனான ஒவ்வொரு சந்திப்பிலுமே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுவது வழமை. அன்றும் அப்படித்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது அரசுத்தலைவர் என்னதான் உத்தரவிட்டாலும் அறிவுறுத்தினாலும் தொல்பொருள் திணைக்களத்தினர் அதனை நடைமுறைப்படுத்த மாட்டார்கள் என்று அவர்கள் தெரிவிக்கப்போக, அதையொட்டி தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தை ஒரு பிடி பிடித்தார் ரணில் விக்கிரமசிங்க.

இந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் பரவத் தொடங்கிய பின்னரே பணிப்பாளர் நாயகம் பதவி விலகினார். உண்மையில் அண்மைக் காலமாகவே வடக்கு கிழக்கில் அமைதியின்மையை ஏற்படுத்துவதில் தொல்பொருள் திணைக்களம் முக்கிய பணியாற்றி இருக்கின்றது. குருந்தூர் மலை, நீராவிப்பிட்டி, வெடுக்குநாறி மலை, கன்னியா வெந்நீரூற்று, நிலாவரை என்று பல இடங்களிலும் தொல்பொருள்கள் திணைக்களத்தால் இந்த அமைதியின்மைஏற்பட்டது. தமிழர்கள்சார்பில்இந்தத் திணைக்களத்தோடு தொடர்புபட்ட பல விடயங்களில் எழுப்பப்பட்ட கரிசனைகளுக்கு அரசுத் தலைவர் ஏதாவது தீர்வுகளை வழங்கினால்கூட, அவற்றைத் தொல்லியல் திணைக்களம் நடைமுறைப்படுத்தத் தவறியிருந்தது. இதுவும் முரண் நிலையை ஏற்படுத்தி வந்தது.

இது எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு – கிழக்கில் பிக்குகள் கொடுக்கும் பணத்தை வைத்தே தொல்லியல் திணைக்களம் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது என்று அரசுத் தலைவர் முன்பாகவே ஒப்புக் கொண்டிருந்தார் அதன் பணிப்பாளர் நாயகம். அது தொடர்பிலும் அரசுத் தலைவரிடம் அவர் வாங்கிக் கட்டிக்கொண்டார்.

அத்தகையஒருவரேஇப்போதுதனதுபணியிலிருந்து விலகியுள்ளார். அவர் அப்படிப் பதவி விலகியமைக்காக சிங்களக் கடும்போக்குவாத அமைப்புக்கள், கட்சிகளிடம் இருந்து கடும் கண்டனங்கள் கிளம்பத் தொடங்கியிருக்கினன்றன. என்றாலும் அவரது பணி விலகல் ஏதாவது மாற்றங்களைக் கொண்டு வருகின்றதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். அந்தத் திணைக்களத்தால் இதுவரை தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்கைளத் திரும்பப் பெறுவதில் காணப்பட்ட தடைகள் நீக்கப்படுகின்றதா என்பதையும் பார்ப்போம்.

# கல்வியல் கல்லூரி ஆசிரியர்கள் நியமனத்தில் நடப்பது என்ன?



ந.லோகதயாளன்,

கல்வியல் கல்லூரியில் இருந்து இம்முறை வெளியேறும் ஆசிரியர்களில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை அந்த மாகாணத்திலேயே நியமிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வரையில் கோரிக்கை முன்னெடுத்துச் செல்லப்பட்டது. அதற்கு அவரும் சாதகமாகக்கருத்துத்தெரிவித்தார். ஆனால் வடக்கு மாகாணத்திற்கு 350 ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். நாளை இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சாள்ஸினால் வழங்கப்படவுள்ளன.



இது ஏன்? வடக்குக்கு ஒரு மாதிரியும் கிழக்குக்கு ஒரு மாதிரியும் ஏன் ஆசிரியர் நியனமங்கள் செய்யப்படுகின்றன?

வடக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஏற்பவே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஆசிரியர்களை கோரியது. அவ்வாறு கோரப்பட்ட 350 ஆசிரியர்கள் வடக்குமாகாணத்திற்குஉட்பட்ட பாடசாலைகளிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில்இருந்துகல்வியியல் கல்லூரிகளில் பலரும் கற்று வெளியேறினாலும் அவர்கள் எல்லோரையும்வடக்குமாகாணத்திற்குள் நியமிக்க முடியாது. அதற்கானவெற்றிடங்கள்இல்லை என்று விளக்குகிறார் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உமாமகேஸ்வரன்.

இதில் சிங்களப் பாடத்திற்கு 30ஆசிரியர்கள்நியமிக்கப்படுகின்றனர். இதேநேரம் கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களைத் தரம் 6 முதல் தரம் 11இற்கு உட்பட்ட வகுப்புக்களின் பாடங்களிற்கே நியமிக்க முடியும். உயர்தர வகுப்புக்களிற்கான பாட ஆசிரியர்களாக நியமிக்க முடியாது என்பதனால் வடக்கு கிழக்கு மாகாணத்தில்காணப்படும்உயர்தர வகுப்புக்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை இவர்களைக் கெகாண்டு நிரப்ப முடியாது. எனவே சாதாரண தரத்துக்குள் இருந்த 350 வெற்றிடங்களுக்கு மட்டுமே நாம் ஆட்களைக் கோரினோம்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை வடக்கு மாகாணத்திற்கு வெளியே செல்லவிடாது உள் வாங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கைதொடர்பிலும் ஆராயப்பட்டது. அந்த ஆசிரியர்களின்பாடங்களிற்கான வெற்றிடம் போதியளவில் வடக்கு மாகாணத்தில் கிடையாது. குறிப்பாக இரண்டாம் நிலைப்பாடசாலைகளில் கணித பாட ஆசிரியர்கள், யாழ்ப்பாணம் வலயம் உட்பட்டச்சிலவலயங்களில் ஏற்கனவே மேலதிக ஆளணியினராக உள்ளனர். வேறுவலயங்களில் கணித பாட ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இருந்தாலும் ஒட்டுமொத்தமாகவடக்குமாகாணத்தில் வெற்றிடம்இல்லாதகாரணத்தால் மேலதிக ஆளணியினராக கல்வியில் கல்லூரி பட்டயதாரர்களை (டிப்ளோமா)இணைத்துக்கொள்ள முடியாது.

தகவல் தொழில்நுட்பம், சித்திரம், சங்கீதம், நடனம் போன்ற பாடங்களில் வடக்கு மாகாணத்தில்ஆசிரியவெற்றிடங்கள் உண்டு. ஆனால் இந்தப் பாடங்களில் கல்வியியல் கல்லூரிகளில் இருந்துஆசிரியர்கள்வெளியேறுவது இல்லை. அதனால் அந்த வெற்றிடங்களையும் எம்மால் நிரப்ப முடியயாது. இதேநேரம் இம் மாத இறுதியில்பிறமாவட்டத்தில் பணியாற்றிய ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றத்தின் மூலம் வரவுள்ளனர். இவற்றினையும்கருத்தில்கொண்டு கணக்கிட்டே 350 ஆசிரியர்களை வடக்கிற்குத்தருமாறு கோரப்பட்டது- என்று உமாமகேஸ்வரன் மேலும் விளக்கமளித்தார்.

இதேநேரம் கிழக்கு மாகாண ஆசிரியர்கள் அனைவரையும் கிழக்கிற்கே நியமிக்கின்றனர் வடக்கு மாகாண கல்வி அமைச்சின்வினைத்திறன்இன்மையால் வடக்கு மாகாண ஆசிரியர்கள் பிற மாகாணத்திற்கு செல்லும் நிலை உருவாகின்றது என்கிற குற்றச்சாட்டுக்குறித்து அவரிடம் கேட்டபோது,. இங்கே கிழக்கு மாகாணத்துடன் வடக்கினை ஒப்பிட முடியாது என்றார்.

கிழக்கு மாகாணத்தின் மக்கள் தொகை அல்லது மாணவர் எண்ணிக்கை ஆண்டு தோறும்4வீதம் அதிகரிக்கின்றது. வடக்கு மாகாணத்தில் ஆண்டு தோறும் 8 வீதம் அது வீழ்ச்சி அடைகின்றது. அதனால் ஆளணித் தேவை அங்கே அதிகரிக்க இங்கேகுறைவடைகின்றது. இந்த நிலை எதிர்காலத்தில் வடக்கிலே இன்னும் மோசமடையும்சாத்தியங்களேஅதிகம்காணப்படுகின்றன வடக்கிலேமன்னார்மாவட்டத்தின் மாணவர் எண்ணிக்கை மட்டுமே வளர்ச்சி வேகத்தில் உள்ளது. ஏனைய 4 மாவட்ட மாணவர் எண்ணிக்கையும் வீழ்ச்சிப் போக்கிலேயேஉள்ளது. இதற்குப் பிறப்பு வீதமே முக்கிய காரணம் -என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வியல்கல்லூரியில்சிறப்புத் தேர்ச்சியில்சித்திஎய்தியஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளிற்கே நியமிக்கப்படுவார்கள். எஞ்சியவர்களே மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படுவார்கள். இம்முறை வடக்கிற்கு நியமனம்செய்யும்ஆசிரியர்களில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தக பாட ஆசிரியர்கள் அதிகமாக உள்ளனர். உயர்தரப் பாட ஆசிரிய வெற்றிடங்களைப் பட்டதாரி ஆசிரியர்கள் மூலமே நிரப்ப முடியும். இருந்தபோதும் விரைவில் மாற்றம் அல்லது ஒய்வு பெறக்கூடும்எனஎதிர்பார்க்கப்படும் 120 ஆசிரியர்களிற்கும் பதில் ஆசிரியர்களைக் கோரியிருக்கிறோம். இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

இவை அனைத்திற்கும் மத்தியில் கல்வியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும. 7,500 ஆசிரியர்களில்வடக்குமாகாணத்திற்கு350ஆசிரியர்கள்மட்டும்தான் நியமிக்கப்படுகின்றனர் என்ற எண்ணிக்கையும் தவறானது ஏனெனில்வடக்குமாகாணத்திலே உள்ளதேசியபாடசாலைகளிற்கான நியமனம்நேரடியாக கொழும்பில் இடம்பெறுகின்றது. அந்த நியமனத்திலும் நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் வடக்கில் உள்ள தேசியபாடசாலைகளிற்குநியமனம் பெற்று வருகின்றனர். அந்த எண்ணிக்கையினையும்இணைத்துப் பார்த்தால் மொத்தமாக சுமார் 500 ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்திற்கு வருகின்றனர்.

இவை அனைத்திற்கும் அப்பால் இந்த ஆசிரியர்கள் 2019/2020ஆம் கல்வி ஆண்டில் தேர்வான ஆசிரிய மாணவர்கள் கொரோனா காரணமாக தாமதமாக வெளியேறும்நிலை ஏற்பட்டது. இருப்பினும் அடுத்த ஆண்டு மாணவர்கள் 2024 ஆரம்பத்தில்வெளியேறவுள்ளனர் அதன்போதும் இதே நெருக்கடி மேலும் அதிகரிக்காமலும் திட்டமிணப்படுகின்றது.



**தகவல் தொழில்நுட்பம், சித்திரம், சங்கீதம், நடனம் போன்ற பாடங்களில் வடக்கு மாகாணத்தில் ஆசிரிய வெற்றிடங்கள் உண்டு. ஆனால் இந்தப் பாடங்களில் கல்வியியல் கல்லூரிகளில் இருந்து ஆசிரியர்கள் வெளியேறுவது இல்லை. அதனால் அந்த வெற்றிடங்களையும் எம்மால் நிரப்ப முடியயாது.**

காலைக்கதிர்
Kalaikkathir

# நுரைச்சோலை வீட்டுத் திட்டத்தை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் நியாயம் நிலைநாட்டப்படவேண்டும்

## மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஹரீஸ் போர்க்கொடி




சவூதி அரேபிய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச நுரைச்சோலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தை தேவையுடைய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் உள்ள இழுபறியில் உச்சநீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்று தேசிய இன விகிதாசாரப்படி அந்த வீட்டுத் திட்டத்தை கையளிக்க வேண்டும் என எழுத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கையை ஏற்க முடியாது என இன்றைய அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் நெறிப்படுத்தலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டவலியு.டி. வீரசிங்க ஆகியோரின் இணைத்தலைமையில் நாடாளுமன்றஉறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச உயரதிகாரிகளின் பங்குபற்றலுடன் அம்பாறை மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நுரைச்சோலை பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தை நாட்டின் தேசிய இன விகிதாசாரப்படி வழங்க முன்வர வேண்டும் என்றும் அதுவே உச்ச நீதிமன்றத் தீர்ப்பாக உள்ளதாகவும் அந்தக் கூட்டத்தில் எழுத்து மூல கோரிக்கை முன்வைக்கப்பட்டு அந்தக் கோரிக்கைக்கு ஆதரவாகக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அந்த கூற்றை மறுதலித்து இந்தத் தீர்மானம் மனசாட்சிக்கு முரணானதென்றும் அந்த வீட்டுத்திட்டத்தை நாட்டின் தேசிய இன விகிதாசாரப்படி வழங்க முடியாதென்றும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழும் மக்களின் இன விகிதாசாரப்படியே வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார். இந்த வீட்டுத்திட்டங்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவூதி அரசாங்கம் வழங்கிய உதவி. இந்த வீட்டுத் திட்டத்தை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதில் உள்ள இழுபறியால் சவூதி – இலங்கை நட்புறவுக்கும் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இந்தவீட்டுத்த்திட்டவிடயம்தொடர்பில் சவூதி மன்னர் அதிருப்தியில் உள்ளார் என இலங்கைக்கான சவூதித் தூதுவர் எங்களிடம் பலமுறை கூறியுள்ளார். இந்த வீட்டுத் திட்டங்களை மனிதாபிமானமே இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காமல் எங்கோ இருக்கும் சம்பந்தமே இல்லாத மக்களுக்கு வீடுகளைக் கையளிக்க முனைவது ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் வாதிட்டார்.

இதுஉச்சநீதி மன்றத்துடன் தொடர்புபட்ட விடயமாகஉள்ளதால் இந்த விடயத்தில் உள்ள நியாயங்களை எடுத்துரைக்க நாடாளுமன்றஉறுப்பினர்கள் சட்டமா அதிபரை சந்தித்து பேச வேண்டும். அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாண ஆளுநரையும் அவர் இவ்வேளையில் கேட்டுக்கொண்டார்.

இது விடயமாக சட்டமா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர்மட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து பேச தான் துரிதகதியில் ஏற்பாடுகளைச் செய்வதாக கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது உறுதியளித்தார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கத்தக்கதாக கிழக்குக்கு வெளியே ஆசிரியர்களை நியமிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும், கிழக்கில் ஆசிரிய ஆளணி வெற்றிடம் இருக்கத்தக்கதாக மாகாண கல்வி அமைச்சு அனுப்பியுள்ள கிழக்கு மாகாண ஆளணி தொடர்பிலான அறிக்கைகளைசுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், தனது கண்டனங்களை பதிவு செய்ததுடன் ஆசிரிய வெற்றிட்டங்களை நிரப்பி கிழக்கின் கல்வி மேம்பாட்டை உறுதிப்படுத்த கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கில் நியமனம் செய்யத் தேவையான நடவடிக்கைகளை உரியவர்களிடம் பேசி எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்த மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீதைவிர அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு எந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்திலுக்கு சிலோன் மீடியா போரம் கௌரவம்









கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் அண்மையில் நியமிக்கப்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் மாகாண அமைச்சருமான செந்தில் தொண்டமானை சிலோன் மீடியா போரம் பொன்னாடைபோத்தி நினைவுச்சின்னம் வழங்கி வாழ்த்தி கௌரவித்தது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்குமிடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று திங்கட்கிழமை மாலை அம்பாறை ஆளுநர்விடுதியில் இடம்பெற்றது. இதன்போதே இந்தக் கௌரவிப்பு நடைபெற்றதுடன் கிழக்கு ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள், தேவைகள் அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டதுடன், கிழக்கிலிருந்து வெளியாகும் பத்திரிகையின் சிறப்பு பிரதியும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் சிலோன் மீடியா போரத் தின் தலைவரும், சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளருமான கலாநிதி றியாத் ஏ மஜீட், சிலோன் மீடியா போரத்தின் பொருளாளரும், கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளருமான யூ.எல்.என். ஹூதா உமர், சிலோன் மீடியா போரத்தின் பிரதித்தலைவரும், ஆசிரியருமான எஸ். அஸ்ரப்கான், சிலோன் மீடியா போரத்தின் நிறைவேற்றுகுழு உறுப்பினர் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர் பைசால் இஸ்மாயில், உட்பட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# கடவுச் சீட்டைப் பெறுவதற்கு கல்முனையிலும் வசதி செய்க

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி கோரிக்கை

(அகீல்)

கிழக்கு மாகாண மக்களுக்கு உதவும் வகையில் கடவுச்சீட்டு கிளைக்காரியாலயம் ஒன்றை அல்லது விண்ணப்பித்து கையொப்பமிடும் வசதியை கல்முனையில் அமைக்கும்படி ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளது.

இது பற்றி கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்ததாவது, நாட்டில் பொருளாதார கஷ்டங்கள் இருக்கும் நிலையில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவர் கொழும்புக்கு சென்று பாஸ்போட்டை பெற விண்ணப்பிக்க பல்லாயிரக்கணக்கில் செலவு செய்ய வேண்டியுள்ளது.

இந்நிலையில் கிழக்கு மாகாண மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் பாஸ் போட் கிளைக்காரியாலயம் அமைக்கும்படி கடந்த வருடம் கௌரவ ஜனாதிபதியை கடிதம் மூலம் கோரினோம்.

தற்போது பாஸ்போட் பெறவிரும்புவோர் அம்பாரை மாவட்டத்தின் சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய பிரதேச செயலகங்களில் கையொப்பமிட முடியும் என அரசு அறிவித்துள்ளமை ஓரளவு ஆறுதல் தரும் விடயமாகும்.

ஆனாலும் அதிக சனத்தொகையும், பின் தங்கிய கொலணி போன்ற பிரதேசங்களை அண்மித்தது மானகிழக்கின் முகவெற்றிலை என அறியப்பட்ட கல்முனை பிரதேச செயலகத்துக்கும் இதற்கான அனுமதியை வழங்கும்படி கௌரவ ரணில் விக்ரமசிங்கவை ஐக்கிய காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொள்கிறது. எனத் தெரிவித்தார்.

# முள்ளிப்பொத்தானையில் ஜூன் 17 நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனுசரனையுடன் தம்பலகாமம் பிரதேச செயலகமும் முள்ளிப்பொத்தானை ஆரம்ப சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை ஜூன் 17 காலை 6.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர ஹமீதியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளதாக தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் தெரிவித்தார்.

இதில் குருதிப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற் சிகிச்சை, வெளிநோயாளர் பிரிவு பொது வைத்திய சேவை, ஆற்றுப்படுத்தல், சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவி பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல், பொது சன மாதாந்த உதவி கொடுப்பனவு, நோய் உதவி கொடுப்பனவு (புற்று நோய்,சிறுநீரக நோய்) , மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல், முதியோர் ,தேசிய அடையாள அட்டை, இறப்பு பிறப்பு சான்றிதழ் தொடர்பான சேவைகள் என்பன வழங்கப்படவுள்ளன. பொது மக்கள் கலந்து கொண்டு இலவச சேவையினை பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கதிர்காம யாத்திரீகர்களுக்கு காட்டில் இலைக்கஞ்சி

(காரைதீவு நிருபர் சகா)

கதிர்காம காட்டுப் பாதை வழியாக கதிர்காமம் செல்லும் அடியார்களுக்கு, முதல் நாள் முதல் தரிப்பிடமான வாகூர வெட்டையில் (வண்ணாத்திர கிணற்றடி) திங்கட்கிழமை இலைக்கஞ்சி வழங்கப்பட்டது.

பிரபல சமூக சேவையாளரும், காரைதீவு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

அவர் தலைமையிலான குழுவினர் காட்டுக்குள் இவ் இலைக்கஞ்சியை காய்ச்சி சுடச்சுட வழங்கினார்கள்.

முதல் கட்டமாக நடந்து களைப்புடன் வந்த அடியார்களுக்கு அது தேவாமிர்தமாக இருந்தது எனப் பலரும் கூறினர். யாழ் கதிர்காம பாதயாத்திரை அடியார்களும் இதில் பங்கேற்றார்கள்.

# திருமலையிலிருந்து கதிர்காம யாத்திரை



( ஹஸ்பர் )

வரலாற்று சிறப்பு மிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு திருகோணமலை திருக்கோணேசர் யாத்திரிகர் சபையினால் கதிர்காம பாத யாத்திரை நேற்றுக் காலை திருகோணமலையிலிருந்து பல கோயில் தரிசனங்களுடன் தொடங்கியது. இந்த பாதயாத்திரையில் சுமார் 60 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# மஹிந்தவின் அரசியல் ஆளுமை கோட்டாபயவிடம் இல்லையாம்

## போட்டுத் தாக்குகிறார் ரோஹித அபேகுணவர்தன



மஹிந்த ராஜபக்சவின் அரசியல் ஆளுமை கோட்டாபய ராஜபக்சவிடம் இருந்திருந்தால் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் இன்றும் நிலைத்திருந்திருக்கும்.

பொதுஜன பெரமுனவை புறக்கணித்து இனிவரும் காலங்களில் எவராலும் அரசாங்கத்தை அமைக்க முடியாது என ஆளும் தரப் பின்நாடாளுமன்றஉறுப்பினர்ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அளுத்கம பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். மக்களின் எதிர்பார்த்தை எம்மால் நிறைவேற்ற முடியவில்லை.

நிறைவேற்றுத்துறையின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட முடியாது. அரச தலைவர் எடுத்த ஒருசில தீர்மானங்கள் பொருளாதாரப் பாதிப்புதீவிரமடைந்து பாரிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசியல் ஆளுமை கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இருந்திருந்தால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் இன்றும் ஆட்சியில் இருந்திருக்கும். பொருளாதாரப் பாதிப்பு பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வீதிக்கு இறங்கி போராடினார்கள். மக்கள் போராட்டத்தைக் குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படுபவர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள். இதன் காரணமாகவே பொதுஜன பெரமுனவின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை புறக்கணித்து செயற்பட ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். பொதுஜன பெரமுன அரசியலில் என்றும் இரண்டாம் பட்சமாகாது.

எமது ஆதரவு இல்லாமல் இனி–வரும் காலங்களில் எவருக்கும் அரசாங்கத்தை அமைக்கவும் முடியாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்கிறோம். – என்றார். (05)

# ஒலி, ஒளி ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டமூலம்: ஊடகங்களை கட்டுப்படுத்தும் ஆயுதமாக அமையகூடாது!

## பிவிதுரு ஹெல உறுமய வலியுறுத்து



ஊடகநிறுவனங்களுக்குவழங்கப்படும் அனுமதி பத்திரம் கண்காணிக்கப்பட வேண்டும் ஆனால் அனுமதி பத்திரம் ஊடகங்களை கட்டுப்படுத்தும் ஆயுதமாக மாறக்கூடாது.

ஒலி மற்றும் ஒளி ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலம் தனிமனிதனின் சிந்தனை சுதந்திரத்துக்கு எதிரானது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஊடகங்களுக்கு வழங்கப்படும் அனுமதி பத்திரம் மாபெரும் வியாபாரமாகக் காணப்படுகிறது. செல்வந்தர்களுக்கு மாத்திரம் அனுமதி பத்திரம் விநியோகிக்கப்படுகிறது.

ஊடக துறையில் சேவையாற்ற நினைக்கும் தரப்பினர் செல்வந்தர்களிடமிருந்து அனுமதி பத்திரத்தைப் பெற வேண்டும் என்ற நிலையே தற்போது காணப்படுகிறது.

உத்தேச ஒளி மற்றும் ஒலிபரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை சட்டமூலத்தின் ஊடாக ஊடகங்களுக்கு வழங்கப்படும் அனுமதி பத்திரம் கண்காணிக்கப்பட வேண்டும்.

அனுமதி பத்திர விநியோகத்தில் சிறந்த வழிமுறை பின்பற்றப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

இந்த சட்டமூலம் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் ஓர் ஆயுதமாக அமைய கூடாது. 1997 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமையிலான அரசாங்கம் இதுபோன்ற ஒரு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அப்போது அந்தச் சட்டமூலம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டது.

ஊடகங்களைக்கண்காணிக்கும் அல்லது ஊடகங்களுக்கு வழங்கப்படும் அனுமதி பத்திரம் கண்காணிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

இருப்பினும் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட–மூலம் அரசமைப்பின் 10 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தனிமனித சுதந்திரத்துக்கு எதிரானது என அப்போதைய பிரதம நீதியரசர் ஜி.பி.எஸ். சில்வா குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களைக் கண்காணிப்பது வேறு, ஊடகங்கள் சுதந்திரம் வேறு என அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதை அவதானத்திற் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெயரளவு ஜனநாயகவாதி என்பதை பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம். தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ஒலி மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை சட்டமூலம் தனிமனித சிந்தனை சுதந்திரத்துக்கும் ஊடகச் சுதந்திரத்துக்கும் எதிரான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. ஆகவே இந்த சட்ட–மூலத்தை உயர்நீதிமன்றம் முழுமையாக பரிசீலனை செய்யும். – என்றார். (05)

# கோட்டா தவறிழைத்தாரேதவிர பெரமுன தவறிழைக்கவில்லை

## கட்சியைக் காப்பாற்றுகிறார் சாகர



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் அரச தலைவரான கோட்டாபய ராஜபக்ச தவறிழைத்தாரே தவிர பொதுஜன பெரமுன தவறிழைக்கவில்லை.

வெகுவிரைவில் தேர்தல் ஒன்று இடம்பெறும். ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அளுத்கம பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அடிமட்ட மக்கள் ஆதரவுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2016 ஆம் ஆண்டு உதயமானது. நல்லாட்சி அரசாங்கத்தின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 2028 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் எனத் தொடர்ந்து மக்களாணையை உறுதிப்படுத்தினோம்.

30 வருடகால பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த ராஜபக்சர்களை பெரும்பாலான மக்கள் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார்கள். ராஜபக்சர்கள் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார்களே தவிர நாட்டுக்கு தீ வைக்கவில்லை.

கொவிட் பெருந்தொற்றின் பின்னரான காலப்பகுதியில் பொருளாதாரப் பாதிப்பு அரசியல் நெருக்கடியாக மாற்றியமைக்கப்பட்டது.

இதற்கு மஹிந்த ராஜபக்சவின் உருவப்படத்தை வைத்து அரசிய–லுக்கு வந்த தரப்பினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதிக்குப் பின்னர் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உட்பட ராஜபக்ஷர்கள் அரசியலில் இருந்து விலகி விடுவார்கள் என நாட்டுக்கு தீ வைத்த மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் கருதினார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை ஸ்தாபித்துள்ளோம்.

வெகுவிரைவில் ஏதாவதொரு தேர்தல் இடம்பெறும். அப்போது எமது பலத்தை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச அரசியல் ரீதியில் தவறிழைத்தாரே தவிர பொதுஜன பெரமுன தவறிழைக்கவில்லை. பொதுஜனபெரமுன தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் அமைப்போம். – என்றார். (05)

# பொரலஸ்கமுவையில் பெண்ணிடம் ஆயுதமுனையில் கொள்ளையடிப்பு

பொரலஸ்கமுவ, கட்டுவாவெல மாவத்தையில் உள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த பெண்ணுக்கு கொலை மிரட்டல் விடுத்து வீட்டிலிருந்த சுமார் ஒரு கோடி



ரூபா பெறுமதியான சொத்துக்களைக் கொள்ளையிட்டுச் சென்ற நபர்களைக் கைது செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டின் உரிமையாளர் துறைமுக அதிகார சபையிலும் அவரது மனைவி வங்கி முகாமையாளராகவும் பணிபுரிகின்றனர். மேலும் ஒரு பெண் அங்கு வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் செய்வதும் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

குறித்த பணிப்பெண் வீட்டில் தனியே இருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (05)

# திக்வெல்லையில் துப்பாக்கி சூடு



மாத்தறையின் திக்வெல்லை பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை நபர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 51 வயதுடைய நபர் ஒருவர் காயமடைந்து மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)



# தற்போதைய பொருளாதார நிலைத்தன்மை நிரந்தரமானது அல்ல திஸ்ஸ அத்தநாயக்க









பாறுக் ஷிஹான்

நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதார நிலைத்தன்மை – உறுதிப்பாடு – நிரந்தரமானது அல்ல, நாட்டின் கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கும்போதும் இறக்குமதிகள் அனுமதிக்கப்படும்போதும் ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி அடையும்.

இவ்வவாறு கல்முனையில் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க. ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் வருகை தந்திருந்தார்.

கல்முனைத் தொகுதி அமைப்பாளரும் சட்டத்தரணியுமான எம். எஸ். எம் அப்துர் ரஸ்ஸாக் தலைமையில் ஸாஹிபு வீதியிலுள்ள கட்சியின் கல்முனைத்தொகுதி காரியாலயத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் திங்கட்கிழமை மாலை கலந்து கொண்டு கட்சியின் எதிர்கால திட்டங்கள் சம்பந்தமாக ஆதரவாளர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள், முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருக்கும் கட்சியின் உறுப்புரிமை அட்டைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

அங்கு உரையாற்றிய கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்ததாவது; நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார உறுதிப்பாடு தற்காலிகமானது. பொருட்களை இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் கடன்களை திருப்பிச் செலுத்துவதை நிறுத்தி வைத்திருப்பதல் போன்ற காரணங்களால்தான்

இந்த தற்காலிக உறுதிப்பாடு காணப்படுகிறது எனவே நாட்டில் தற்போதுள்ள உறுதிப்பாடு நிலையானது என நான் நம்பவில்லை..மீண்டும் கடன்களை செலுத்தத் தொடங்குவதுடன் இறக்குமதி கட்டுப்பாடுகளையும் நீக்கினால் இலங்கை ரூபாய் மீண்டும் வலுவிழக்கும் .

அத்துடன் பொதுத் தேர்தலுக்காக ஏற்கனவே வழங்கப்பட்ட வேட்புமனுக்களை இல்லாது செய்யும் நடவடிக்கையில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளதை ஊடகங்கள் ஊடாக அறிந்துகொண்டேன். அது ஜனநாயகத்திற்கு எதிரான செயலாகும் .மேலும் எதிர்காலத்தில் எந்தவொரு காரணத்திற்காகவும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆட்சியாளர்கள் தீர்மானித்தால் அதற்கும் தமது கட்சி தயாராகவே இருக்கின்றது.

இதுதவிர ஒலிபரப்பு அதிகாரசபை சட்டம் தற்போது பேசப்படுகின்றது. ஆனால் அத்தகைய சட்டமூலங்களை அறிமுகப்படுத்தவேண்டிய அவசியமில்லை..எனினும் சில விடயங்களில் கட்டுப்பாடுகளை வலுப்படுத்த சுயதணிக்கையை நிறுவலாம் என அவர் கூறினார்.

## தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. ஒருவரை கல்முனைத் தொகுதிக்கு நியமிப்பீர்களா?

### திஸ்ஸவிடம் எழுப்பப்பட்டது கேள்வி



(பாறுக் ஷிஹான்)

ஐக்கிய மக்கள் சக்தி எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தால், அந்தத் தேர்தலில் உங்கள் கட்சியின் சார்பில் கல்முனைக்கு ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஒதுக்கு–வீர்களா? இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் கேள்வி எழுப்பினார் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஏ.அப்துல் கபூர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கல்முனைக்கு வருகை தந்திருந்தபோது நடந்த அரசியல் கூட்டத்தில் அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

"மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுடனும் மர்ஹூம் மன்சூருடனும் நெருக்கமாகவும் பாசமாகவும் இருந்த கல்முனைத் தொகுதி மக்கள், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மகன் எதிர்காலத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரவிருக்கும் சஜித் பிரேமதாசாவுக்கு வாக்களித்து ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை ஆட்சியில் அமர்த்த ஆயத்தமாகிவிட்டார்கள். உங்கள் கட்சி எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தால் கல்முனைத் தொகுதிக்கு தேசிய பட்டியல் மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை நியமிப்பீர்களா?" என்றார் அவர். முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏஆர்.மன்சூர் 17 ஆண்டு காலம் ஜக்கிய தேசியக்கட்சியுடன் ஜனாதிபதி பிரேமதாசவுடன் மிக நெருக்கமாக இருந்து கல்முனை மக்களுக்கு பல அபிவிருத்தி வேலைகளைச் செய்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சியை

கல்முனைப் பிரதேசத்தில் வளர்ச்சி அடையச் செய்தார். அவரது மறைவுக்குப் பின் அவரது ஆதரவாளர்கள் அனாதைகளாக்கப்பட்டனர் என்றும் குறிப்பிட்டார்.

அவரது கேள்விக்குப் பதில் அளித்த தேசிய அமைப்பாளர் திஸ்அத்னதநாயக்கா இந்தக்கோரிக்கையை கட்சி தலைமைக்கு எடுத்துக் கூறுவேன் என்றார்.

# முதலில் ஜனாதிபதித் தேர்தல் அதுவும் முற்கூட்டி நடக்காதாம்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது என்று கொழு–ம்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

குறித்த தினத்துக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என அறியமுடிகின்றது. அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்தின் பின்பே ஜனாதிபதித் தேர்தல். ஆனால், அந்தத் தேர்தலை இலக்கு வைத்து இப்போதே அடிப்படை வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அரச தரப்பு தகவல்கள் கூறுகின்றன.



அதற்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் அரசு நடத்தவேண்டும். ஆனால், அரசு தேர்தலை நடத்துவதற்குப் பணமில்லை என்று கூறி உள்ளூராட்சி சபைத் தேர்தலை காலவரையறை இன்றி ஒத்திப்போட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவு இல்லை. எப்படியும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது என்பது தெளிவாகின்றது. – என்றுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான திட்டம் அரசிடம் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பிலேயே தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது. நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்னர் உரிய நேரத்தில், உரிய வகையில் தேர்தல்கள் நடத்தப்படும் – என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (02)

# சப்ரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக நவீன்

சப்ரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக நவீன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் நேற்றுக் காலை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

முன்னதாக, சப்ரகமுவ மாகாண ஆளுநராகப் பதவி வகித்த டிக்கிரி கொப்பேகடுவ அண்மையில் தமது பதவியிலிருந்து விலகியிருந்தார்.

இந்த நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

சத்தியப் பிரமாண நிகழ்வின் பின்னர் கருத்து தெரிவித்த நவீன் திஸாநாயக்க செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டிற்காக முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மற்றும் இந்த ஆட்சியின் கொள்கைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான உதவிகளை வழங்க முழுமையாக முயற்சிப்பேன்.

கடந்த காலங்களில் நாடு கடுமையான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருந்த போதிலும் ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்பட்ட சரியான திட்டங்களின் பயனாக சாதகமான மாற்றங்களைக் காண முடிகின்றது. அதேபோன்று சப்ரகமுவ மாகாணத்தின் அபிவிருத்திக்காக அர்பணிப்புடன் செயற்படுவேன்.

குறிப்பாக சப்ரகமுவ மாகாண மாணவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பில் விசேட அவதானம் செலுத்தவுள்ளேன். அதேநேரம் அரசியல் கட்சித் தலைவர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு ஆட்சியாளர்களின் கொள்கைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளேன் - என்றார்.

# தமிழ் பௌத்த வரலாற்றை ஏற்றுக்கொண்டமைக்காக ஜனாதிபதி ரணிலுக்கு மனோ எம்.பி. பாராட்டுக்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நான் பாராட்டுகிறேன். முதன்முறையாக நாட்டின் தலைவர் இலங்கைத் தீவின் 'தமிழ் பௌத்த வரலாற்றை' பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கையின் வரலாற்றில் தமிழ் பௌத்த வரலாற்றுக்கு உரிய இடத்தை ஏற்றால், அது இன்று நாம் எதிர்கொள்ளும் அநேக பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் சாவியாகும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தமிழரசுக் கட்சியினருடனான கலந்துரையாடலின் போது தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில பணிப்புரைகளை விடுத்துள்ளார். அதன்போது இலங்கைத் தீவின் 'தமிழ் பௌத்த வரலாற்றை' பகிரங்கமாக



ஏற்றுக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்க கருத்துக் கூறியுள்ளார்.

இப்படி ஒரு தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை சிங்களத் தீவிரர்கள் எப்போதும் மறைக்க விரும்புகிறார்கள். அந்த விஜயன் வந்த இறங்கிய கதை பொய்யென்று என்னைத்தேடிவந்து வண.பிக்கு ஞானசாரர் சொன்னது போன்றும், இளவரசன் விஜயன் வரவை நினைவுகூர்ந்து, இலங்கை அஞ்சல் திணைக்களம் முத்திரை வெளியிட்டு, பின்னர் அதை இரண்டு வருடங்களில் வாபஸ் பெற்றதைப் போன்றும், வெறும் கைகளால் சூரியனை மறைப்பதை போன்றும், வரலாற்றில் தமிழர்களுக்கு உரிய இடத்தை இவர்கள் எப் போதும் மறைக்க முயன்று வருகிறார்கள்.

தமிழ் பௌத்த வரலாறு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், இன்று நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் என்ற பூட்டுக்கு அது சாவியாக அமையும் என நான் நம்புகிறேன். இந்நோக்கில், 2018 ஆம் வருடம் நான் அமைச்சராக இருந்த போது ஒரு காரியம் செய்தேன்.

பிரபல சிங்கள வரலாற்றாசிரியர், சினிமா எழுத்தாளர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, இலங்கையின் தமிழ் பௌத்த வரலாற்றைப்பற்றி சான்றுகளுடன் எழுதிய, 'தமிழ் பௌத்தன்' (தமிழ் பௌத்தயா) சிங்கள நூல் நாட்டில் பாவனையில் இல்லாமல் இருந்தது. அந்த நூலைத் தேடிப் பிடித்து, பேசி, பேராசிரியரின் அனுமதியை பெற்று அதை எனது அமைச்சின் செலவில் மறுபிரசுரம் செய்து, நாட்டின் சிங்கள பாடசாலைகளுக்கும், விகாரைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

அதன்பின் பேராசிரியர் ஆரியரத்னவை அழைத்து சில பிக்குகள் கண்டித்துள்ளார்கள் என அறிந்தேன். என்னுடன் முரண்பட எவரும் வரவில்லை. இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் போட்டுக் கிழிப்பார்களோ தெரியவில்லை. அவரை அந்த கௌதம புத்தனும், கதிர்காமகந்தனும் காப்பாற்றட்டும். – என்று தெரிவித்தார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். கடற்றொழிலாளர்கள் இந்தியப் பிரதமருக்கு மனு

## துணைத் தூதரகத்தில் நேற்றுக் கையளிப்பு

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்று அந்தநாட்டுப் பிரதமர் நரேந்திர மோடி யைச் சந்திக்கவுள்ள நிலையில் மோடிக்கு வழங்கவென யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் மனு ஒன்றை நேற்று இந்தியத் துணைத் தூதரகத்தில் கையளித்தனர்.

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழில் உள்ள இந்திய துணை தூதுவரைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் இந்த மனுவைக் கையளித்தனர் என்று கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதி அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

இலங்கைக்கடலில் இந்தியமீனவர்களின் அத்துமீறல் மற்றும் இலங்கைக் கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத தொழில்நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையுடன் பேசிதீர்க்கமான ஒரு முடிவை எடுக்கும்படி பிரதமர் மோடியிடம் அந்தமனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சீனாவை இலக்காகக் கொண்டு கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்படும் விவகாரம் தொடர்பிலும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உடுவில் பிரதேச செயலக சுற்றாடல் தின நிகழ்வுகள்

எமது நாடு இவ் வருடம் மே மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் ஜீன் 5 ஆம் திகதி வரை சர்வதேச சுற்றாடல் வாரமாக கொண்டாடப்படுகின்றது.

இந்த நிகழ்வில் முதல் நிகழ்வான மரநடுகை நிகழ்வு உடுவில் பிரதேச செயலாளர்த.முகுந்தனால்பிரதேசசெயலக வளாகத்தில் 01.06.2023 ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்டதைத்தொடர்ந்து பதவி நிலை உத்தி யோகத்தர்களினாலும்ஏனையஉத்தியோகத்தர்களினாலும் மரம் நடுகை செய்யப்பட்டதுடன் மரக்கன்றுகளும் விநியோகம் செய்யப்பட்டன

அடுத்த நிகழ்வாக வளிமாசாக்கம் மற்றும் அதன் பாதகமான தாக்கங்களை குறைக்கும் தினம் எனும் தலைப்பில் இணுவில் பரராஜ சேகர பிள்ளையார் கோயில் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

சுற்றாடல் சுத்தப்படுத்துகை தினம் உடுவில் பிரதேச செயலகத்திலும் கிராம மட்ட பொது இடங்களிலும் சிரமதான நிகழ்வுகள் மூலம் செயல்படுத்தப் பட்டது.

கிராமமட்டத்தில்கழிவுமுகாமைத்துவம் பற்றியும்உயிர்ப்பல்வகைமைபாதுகாப்பு தொடர்பாகவும் நீர் மூலாதாரங்களைப் பாதுகாத்தல்தொடர்பாகவும் 1ஃ195 கிராம அலுவலர் பிரிவில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப் பட்டது.

கழிவு, முகாமைத்துவம் மற்றும் பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவம் பற்றியும் இணுவில் சனசமூக நிலைய சிறுவர் திறன்விருத்திமைய முன்பள்ளிமாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## யாழ்ப்பாணத்தில் கறுவாச் செய்கை 2ஆம் கட்ட பயிற்சிகள்

யாழ்ப்பாணத்தில் கறுவா பயிரிடுவது குறித்த இரண்டாம்கட்ட பயிற்சிப் பட்டறை ஜூன் 16 காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கறுவாச் செய்கை தொடர்பான முதற்கட்டப் பயிற்சிப்பட்டறை ஏற்கனவே வட்டுக்கோட்டைபன்குருமுருகன் ஆலயத்தில் நடத்தப்பட்டது. அதன் இரண்டாம் கட்ட பயிற்சியை,கறுவாஆராய்ச்சி மற்றும்பயிற்சிநிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜி.ஜி. ஜயசிங்க தலைமையில், கறுவா ஆராய்ச்சி நிலைய ஊழியர்களும் இணைந்து நடத்தவிருக்கிறார்கள். இப்பயிற்சிப் பட்டறை, மருதனார்மடம் உரும்பிராய் பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில், நடைபெறவுள்ளது.

கறுவா உற்பத்தியில் ஆர்வமுள்ள எவரும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதற்கானஏற்பாடுகளை பொறியியலாளர் புவனகுமார்அவர்கள்மேற்கொண்டு வருகிறார்.

# 300 போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் ஒருவர் கைது



வவுனியா, கோவில்குளம் சந்தியில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதுகட்டுப்படுத்தப்பட் போதைப்பொருளான பிரீகபலின் மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படைமற்றும்பொலிஸ்விசேட அதிரடிப்படையினரால் இந்தக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

300 போதை மாத்திரைகளை விற்பனைக்காக எடுத்துச் சென்ற போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வவுனியாவைச் சேர்ந்த 41 வயதுடையவர் என்றும், மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது. (02)

# நான்கு மாதங்களில் மாத்திரம் 3,000 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

இந்தஆண்டின்முதல்நான்குமாதங்களில் சிறுவர்துஷ்பிரயோகம்தொடர்பில்மூவாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் சிறுவர்களின் செயற்பாடுகள், கல்வி மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் எண்ணாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (02)



# காரைநகர் வைத்தியசாலைக்கு மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு

காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாக ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கனடா காரை கலாசார மன்றத்தில் ஒருத்தி திரைப்படத்தை இலவசமாகத் திரையிட்டதன் மூலம் பெறப்பட்ட நிதியில் கனடா காரை கலாச்சார மன்றம் இந்த மருந்துப் பொருட்களை வழங்கியிருக்கிறது.

நேற்றுக்காலை இடம்பெற்ற மருந்து பொருட்கள் கையளிக்கும் வைபவத்தில் 'ஒருத்தி ' திரைப்பட தயாரிப்பாளர் சுதாகரனும் கலந்துகொண்டார்.




# டெங்கு பரவும் விதத்தில் செயற்பட்ட 14 பேருக்கு தலா ரூ. 3,500 அபராதம்

## உப்புவெளியில் தீவிர நடவடிக்கை



திருகோணமலை-உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் வீட்டு வளாகத்தில் டெங்கு பரவும் விதத்தில் செயற்பட்ட 14 பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் ஒருவருக்கு தலா 3500/= ரூபாய் வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்றத்தில் இன்று (13) குறித்த வழக்கு நீதிமன்ற பிரதம நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது டெங்கு நுளம்பு பரவும் விதத்தில் வீட்டு வளாகத்தில் குடம்பிகள் இருந்ததாக உறுதி செய்யப்பட்டதை அடுத்து குறித்த 14 பேருக்கும் ஒருவருக்கு 3500/= ரூபாய் வீதம்தண்டம்செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரித்து வந்துள்ள நிலையில் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இரண்டு மரணங்களும் சம்பவித்துள்ளது.

இந்நிலையில் செல்வநாயகபுரம் பகுதியில் வீடு வீடாகச் சென்று டெங்கு தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் டெங்கு பரவும் விதத்தில் செயற்பட்ட குறித்த வீட்டு உரிமையாளர்களுக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் சைெயொழிபவன் தெரிவித்தார்.

மேலும் குறித்த பகுதியில் டெங்கு பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் தொடர்ந்தும் வீட்டுவளாகங்களை சோதனை இட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹெரோயின், கஞ்சா, கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட 6 பேர் வாழைச்சேனையில் கைது!

மட்டக்களப்பு வாழைச்சேனையில் ஹெரோயின் போதைப்பொருள், கஞ்சா மற்றும் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட 6 பேரை திங்கட்கிழமை இரவு கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குகிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவதினமான திங்கள் இரவு 80 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்த வியாபாரிகள் 3 பேரை கைது செய்தனர். அதேவேளை கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை 450 மில்லிக்கிராம் கஞ்சாவுடன் கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து, கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட 3 பேரை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 12 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட 6 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# வாழைச்சேனையில் மாற்றுத்திறனாளி மர்மமாகப் படுகாயங்களுடன் மீட்பு!

மாற்றுத்திறனாளி நபரொருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - கொழும்பு, வாகனேரி பிரதான வீதியில் திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு படுகாயங்களுடன் மீட்கப்பட்டவர் ஓட்டமாவடி - காவத்தமுனை ஹிஸ்புல்லாஹ் வீதியைச் சேர்ந்த ஏ.நஸீர் எனும் மாற்றுத்திறனாளி நபர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

படுகாயங்களுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

மர்மமாமன முறையில் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பானவிசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# புற்றுநோய் பாதித்த மனைவியை சித்திரவதை செய்தார் கணவன்

## வெலிபென்னவில் சம்பவம்

புற்று நோயால் பாதிக்கப்பட்ட மனைவியை உடலுறவுக்காக சித்திரவதை செய்தார் எனக் கூறப்படும் 67 வயதுடைய கணவன் தொடர்பில் வெலிபென்ன பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் வெலிப்பன்னபொலிஸ்நிலையத்துக்குச் சென்ற 54 வயதுடைய பெண் ஒருவர் தனது 67 வயது கணவருக்கு எதிராக இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனக்கு 14 வயதாக இருக்கும்போது விருப்பமில்லாமல் தனது கணவரை திருமணம் செய்ததாகவும் திருமணமாகி40வருடங்களாவதாகவும் அவர் கூறியுள்ளர்.

தனக்கும் தனது கணவருக்கும்மூன்றுமகன்கள் இருப்பதாகவும், மூத்த மகனுக்கு சுமார் 40 வயது என்றும் அவர் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெலிப்பன்ன பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# வர்த்தகரிடம் கொள்ளையிடப்பட்ட கார், பணம், தங்க நகைகள் மீட்பு




ஊருபொக்க ஹுலங்கந்த ஹிகொட பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் சொத்துக்களை கொள்ளையிடபயன்படுத்தியகார் மற்றும்கொள்ளையிடப்பட்டசுமார் ஒருகோடிரூபாபணம்மற்றும்தங்க நகைகள்மற்றும்மூன்றுகையடக்க தொலைபேசிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நநநநநநநநந

வலஸ்முல்லநகரில்வாடகைக்கு வாகனங்களை வழங்கும் நிறுவனத்திடமிருந்தே இந்தக் கார் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஊருபொக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கனரக வாகனம் நேற்று பளையில் தடம்புரண்டது

*இந்தச் சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது எனவும் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.* (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் ஊடகங்களைத் தொட அனுமதிக்கோம்

## அநுர காட்டம்



ஊடகங்களை நசுக்கும் வகையில் அரசாங்கம் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ள சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அனுமதிக்கப்பட மாட்டாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் நாட்டுமக்களின் தகவல்களை அறியும் உரிமையை அழிக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் தகவல்களை ஊடகங்கள் மூலம் பரப்புவது அந்த நிறுவனங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தும்

அந்த ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களை இரத்துசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தநாட்டில் தேர்தல்களைப் பிற்போடுவதன் மூலம் ஊடகங்களை அடக்கி ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகும் நோக்கில் ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார் என அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (05)

# இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக வருமானத்திலும் மட்டுப்பாடு விதிப்பு

## சுங்கத் திணைக்களம் தெரிவிப்பு

வாகன இறக்குமதி உள்ளிட்ட பொருள்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக, இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்படும் வருமானத்தை அடைய முடியாமல் போயுள்ளதாக இலங்கை சுங்கத்துறை அறிவித்துள்ளது.

தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீக திட்டமிடல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு, நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கம தலைமையில் கூடிய போதே இலங்கை சுங்க அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் இலங்கை சுங்கத்தின் வருமானமாக 1226 பில்லியன் ரூபா எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்த 5 மாதங்களில் 330 பில்லியன் ரூபாவே கிடைத்துள்ளதாகவும் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அத்துடன், வாகன இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரிகளால் சுங்கத்துக்கு 20 வீத வருமானம் கிடைப்பதாகவும், கட்டுப்பாடுகள் நீக்கப்படும் வரை எதிர்பார்த்த வருமானத்தை எட்ட முடியாது எனவும் சுங்க அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

சுமார் 3 வருடங்களாக வாகன இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதால் சுங்கவரி வருமானம் குறைந்துள்ளதுடன் இம்மாதம் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கினால் எதிர்வரும் 6 மாதங் களுக்குள் 150 பில்லியன் ரூபாவை வரியாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியுடன் தொடர்புடைய அதிகூடிய வரி வருமானம் 2018 ஆம் ஆண்டு பெறப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக சுங்கம் இந்த காலப்பகுதியில் 923 பில்லியன் ரூபாய் நிதியை ஈட்டியதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வாகன இறக்குமதி தொடர்பான பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் துரிதமாக முடிவெடுக்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (05)

# தனியார்மயப்படுத்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்படவேண்டும்

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்து



பொருளாதார முன்னேற்றம், அரசியல் ஸ்திரத்தன்மை உறுதிப்பாடு ஆகியவற்றுக்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தோம். எனவே அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ. காலி – ரத்கம பகுதியில் நேற்று இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.ன அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் அரச தலைவர் கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகியவுடன் அரசமைப்பின் ஊடாக ரணில் விக்கிரம சிங் கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தோம். ராஜபக்ஷகள் மீது திட்டமிட்ட வகையில் போலிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

பொருளாதார முன்னேற்றம், அரசியல் உறுதிப்பாடு ஆகியவற்றுக்காகவே ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கினோம்.

ஒரு மாற்றத்தை நோக்கி ஜனாதிபதி பயணிக்கிறார். அவரின் கொள்ளை திட்டங் களை நிறைவேற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒத்து ழைப்பு அத்தியாவசியமானது.

இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல் என்பதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை தனியார் மயப்படுத்துவது பிரச்சினைக்குரியது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு ஏதாவதொரு வழிமுறையில் பாதிப்பை ஏற்படுத்தும் என பல தரப்பினரால் அறி வுறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம். அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் விரிவாக ஆராய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம் என்றார்.

# சுகாதாரத்துறையில் அத்தியாவசியமான இயந்திரங்களைத் திருத்த நிதி ஒதுக்கீடு

## கெஹலிய தெரிவிப்பு



தற்போது பல வைத்தியசாலைகளில் செயலிழந்துள்ள ஸ்கானர் இயந்திரங்கள் உட்பட அத்தியாவசிய இயந்திரங்களை திருத்துவதற்கு 4 00 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

5 மாதங்களாக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் எம்.ஆர்.ஐ. ஸ்கேனர் செயலிழந்துள்ளதால் நோயாளர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

அரச வைத்தியசாலைகளில் தற்போது 13 எம்.ஆர்.ஐ ஸ்கேன் இயந்திரங்கள் உள்ளன. அதில் பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையில் உள்ள இயந்திரம் ஒன்று 2 வருடங்களுக்கு முன்னர் செயலிழந்துள்ளது. இதன் காரணமாக தற்போது 11 எம்.ஆர்.ஐ.ஸ்கான் இயந்திரங்களே இயங்கி வருகின்றன என அரசாங்க கதிரியக்க நிபுணர்கள் தொழிநுட்ப நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்படும் என உறுதியளித்துள்ளார்.

அத்தோடு பல வைத்தியசாலைகளில் செயலிழந்துள்ள ஸ்கானர் இயந்திரங்கள் உட்பட அத்தியாவசிய இயந்திரங்களைத் திருத்துவதற்கு 400 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (05)

# வீதி விபத்துக்களினால் 709 பேர் நான்கு மாதங்களில் உயிரிழப்பு




இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் வீதி விபத்துக்களால் 709 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஆகவே வீதியில் வாகனங்களை செலுத்தும் போது போக்குவரத்து விதிகளை முறையாக பின்பற்றுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் இடம்பெற்ற விபத்துகளில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவாக பதிவாகியுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர், கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான நிலைவரப்படி, மொத்தமாக 8,202 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என சுட்டிக்காட்டியுள்ளார்.


குறிப்பாக 667 பேர் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும் மொத்தமாக 709 பேர் உயிரிழந்துள்ளதுடன், 2,160 பாரிய விபத்துகள் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 3,201 சிறு விபத்துகள் இடம் பெற்றுள்ளதோடு விபத்துகளில் உயிரிழந்த 709 பேரில் 220 பேர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் என்பதுடன், 102 பேர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 179 பாதசாரிகளும் மரணித்துள் ளனர் எனவும். வீதியில் நிகழும் விபத்துக்களில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களால் இடம்பெற்றுள்ளவை எனவும் தெரியவந்துள்ளது.

எனவே, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் ஓட்டோ சாரதிகள் வீதியில் வாகனங்களை செலுத்தும் போது போக்குவரத்து விதிகளை பின்பற்றுவது மிகவும் அவசியமாகும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# பாசையூர் அந்தோனியாரின் தேர்ப் பவனி நேற்று நடந்தது





பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் பாஷை யூர் புனித அந்தோனியார் வருடாந்த தேர் பவனி நேற்று நடைபெற்றது.

புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கிய நிலையில் திருச்சொரூப தேர்ப் பவனி நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.



# நடவடிக்கை

*வவுனியா பட்டாணிச்சூர் புளியங்குளம் பகுதியின் நீரேந்து பிரதேசம் ஒரு சிலரால் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருந்ததுடன் இதனால் கடந்த சில நாள்களுக்கு முன்னதாக இனமுறுகலும் ஏற்படவாய்ப்பாக இருந்தது.*

*எனினும் பொலிஸார் தலையிட்டு இருதரப்பினரையும் பொலிஸ் நிலையம் அழைத்து சென்று முறைப்பாட்டையும் பெற்றிருந்தனர்*

*இது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் குறித்த ஆக்கிரமிப்புக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று கேள்வி எழுப்பியிருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன்.*

*இதற்கு பதில் கூறிய மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜூன் 18 சம்பந்தப்பட்ட தரப்பினர் நீதிமன்றில் முன்னிலைபடுத்த உள்ளனர் எனவும் தெரிவித்திருந்தனர். (05)*

# தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் திடீர் பதவி விலகல் ஜனாதிபதி அவரைத் திட்டும் காணொலி வந்ததை அடுத்து

தொல்பொருள்திணைக்களப்பணிப்பாளர்நாயகம் பதவியில் இருந்து மூத்த பேராசிரியர் அநுர மனதுங்க பதவி விலகுகிறார் என்று திடீரென அறிவித்துள் ளார். பௌத்தசாசன, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு இதனை அவர் அறிவித்துள்ளார்.

இந்தத் தகவலை பௌத்தசாசன, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அநுர மனதுங்க கடிதம் ஒன்றின் மூலம் தமது பதவி விலகலை அறியப்படுத்தியுள்ளார் என்றார் அமைச்சர்.

அண்மையில், ஜனாதிபதிக்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பு ஒன்றில் ஜனாதிபதியின் கருத்துக்களை ஏற்க மறுத்து பேராசிரியர் பதிலளித்திருந்தார். இது தொடர்பான காணொலி வெளியில் வந்ததைத் தொடர்ந்து பணிப்பாளர் நாயகத்தின் பதவி விலகல் அறிவிப்பு வந்துள்ளது.

ஜனாதிபதியுடானான அந்தச் சந்திப்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் காணி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு விகாரை அமைந்துள்ள காணி தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அது குறித்து ஜனாதிபதி தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அநுர மனதுங்க, குறித்த விகாரை தற்போது 72 ஏக்கர் காணி பரப்பைக் கொண்டுள்ளது, இதனைத் தவிர மேலும் 275 ஏக்கர் பரப்பு நிலம் விகாரை சார்பில் கோரப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

ஜேத்தவனாராமய, மஹா விகாரை மற்றும் அபயகிரி விகாரை என்பனவற்றை இணைத்துப் பார்த்தாலும் 100 ஏக்கர் காணியே இருக்கும். அவ்வாறெனில் குறித்த விகாரைகளை விடவும் அளவில் முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு விகாரை பெரியதா? எனக் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், வரலாற்றை நீங்கள் எனக்குக் கற்றுத் தருகின்றீர்களா? இல்லை நான் உங்களுக்கு கற்றுத்தர வேண்டுமா? எனவும் ஜனாதிபதி கடுமையாக அநுர மனதுங்கவைச் சாடியிருந்தார்.

இதுதொடர்பானகாணொளிசமூகவலைத்தளங்களில், வெளியாகியிருந்தநிலையில்,தொல்பொருள்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தமது பதவியில் இருந்து விலகியுள்ளார். (02)



# மாமனார் ஜே.ஆர். போன்றே செயற்படுகிறார் அவரது மருமகனான ரனில் விக்கிரமசிங்கவும்

## ஒளி. ஒலி பரப்புச் சட்டம் குறித்து விக்னேஸ்வரன் கருத்து

எஸ்.நிதர்சன்

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன போன்றே இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் செயற்படுகிறார் எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விக்கினேஸ்வரன், மாமனார் பாணியிலேயே மருமகனது செயற்பாடும் அமைந்துள்ளன என்றும் தெரிவித்தார்..

தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோதே அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: ஆட்சியாளர்கள் ஊடகங்களை அடங்கும் வகையில் ஒளி, ஒலிச் சட்டத்தைக் கொண்டு வருவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆனால் அவர்கள் இந்தச் சட்டத்தை தற்போது ஏன் கொண்டு வருகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனாலும் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மாமனாரான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன போன்று அவரது பாணியில் செயல்படுகின்றார் என்று கூறலாம்.

சில நேரங்களில் தனக்கு வேண்டியது என்பதற்காகச் சிலவற்றைச் செய்துவிட்டு அதிலிருந்து மக்களைத் திசைதிருப்புவதற்காக மிகவும் பொல்லாத சட்டங்களை கொண்டு வந்துவிடுவார். அந்தக் கடும் சட்டத்திற்கு எதிர்ப்புக் கிளம்பியதும் தான் ஜனநாயகவாதி என்றவாறு கூறிக் கொண்டு - அதாவது தனக்குத் தேவையான காரியம் முடிந்த பின்னர் - அதைக் கை வாங்கி விடுவார்.

இப்படிஏதாவதுஒருகாரணத்திற்காக இப்போது இந்தச் சட்டத்தையும் அவர் கொண்டு வருகிறாரோ தெரியவில்லை. ஆனால் அந்தச் சட்டம் ஜனநாயகத்திற்கு எதிரான சட்டம் என்பதுடன் அதனை நாம் கண்டிக்கிறோம் - என்றார். (03)

# ஒப்பந்த காலம் முடிந்ததாலேயே பேரா. மனதுங்க பதவி விலகினார்

## கலாசார அமைச்சர் விளக்கமளிப்பு



தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்கவின் ஒப்பந்த காலம் நிறைவடைந்ததன் அடிப்படையிலேயே அவர் பதவி விலகினார் என்று புத்தசாசன , சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அமைச்சரவையில் தெரிவித்தார். அவரது பதவி விலகலை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். பேராசிரியர் அநுர மனதுங்க தனது பதவி விலகல் தொடர்பில் நேற்று நடந்த அமைச்சரவையில் ஆராயப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:


தொல்பொருளியல் தொடர்பில் வடக்கு , கிழக்கில் எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவையில் எவ்வித தெளிவுபடுத்தல்களும் வழங்கப்படவில்லை. எனினும் பணிப்பாளர் நாயகத்தின் பதவி விலகல் தொடர்பில் புத்தசாசன , சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இது தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

தொல்பொருளியல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகக் காணப்படுகின்றமையால் ஒப்பந்த அடிப்படையில் 2 ஆண்டுகளுக்கு நியமனம் பெற்றிருந்தார். அதன் பின்னர் அவரது ஒப்பந்த காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய மீண்டும் பேராசிரியராகத் தனது பணியைத் தொடங்க வேண்டுமென்பதால் தொல்பொருளியல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் பதவியிலிருந்து விலகப் போகிறார் என்று குறிப்பிட்டு தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்தார் என்று அமைச்சர் விக்கிரமநாயக்க தெரிவித்தார் - என்றார்.

# இராணுவத்தின் அதிகாரத்தை குறைக்க தீவிர நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



விவாத நிலைமையொன்றை ஏற்படுத்தி இராணுவத்தின் அதிகாரத்தினைக் குறைப்பதற்கு முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதன் காரணமாகவேதான் தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் இருந்து தான் விலகினார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

தனது பதவி விலகல் தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் ஒரு பீல்ட் மார்ல் . இந்தக் குழுவின் தலைவராக இருப்பவர் இரண்டு நட்சத்திரங்களைக் கொண்ட ஜெனரல் நிலைத் தகுதியைக் கொண்டவர். அதில் உள்ள ஏனைய பாதுகாப்பு உறுப்பினர்களும் மேஜர் நிலை தரங்களையே கொண்டுள்ளனர். அத்துடன் ஏனைய அங்கத்தவர்களில் பலர் ஆளும் தரப்பின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

இவ்வாறான நிலைமைகள் காணப்படுவதால் குழுவினுடைய பெரும்பான்மையானவர்களின் தீர்மானத்தின் அடிப்படையில்தான் அங்கு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் எம்மால் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்த முடியாது.

பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் அவர்கள் எமது கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில்லை. தற்போதுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி இராணுவத்தினை சரியான அளவிற்கு மறுசீரமைக்கவுள்ளதாக கூறுகின்றது.

இது தொடர்பில் விவாத நிலைமையொன்றை ஏற்படுத்தி இராணுவத்தின் அதிகாரத்தினைக் குறைப்பதற்கு முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நிலையில் குறித்த குழுவில் அங்கத்தவம் வகிப்பதால் என்னையும் இராணுவத்தினர் தவறாக எண்ணக்கூடும்.

அதுமட்டுமன்றி, இந்த ஆட்சியின் இந்தச் செயற்பாட்டை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று என் மீது குற்றச்சாட்டை முன்வைக்கவும் கூடும். அதனால்தான் குழுவில் இருந்து விலகியுள்ளேன் -என்றார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா இராஜினாமாச் செய்துள்ளார்.

இவரது இராஜினாமாவை அடுத்து அப்பதவிக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மை தனியார்மயப்படுத்துவது தொடர்பிலான தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற் பார்வைக் குழுவின் அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டதன் பின்னணியிலேயே சரத் பொன்சேகா பதவி விலகினார்.

அதேநேரம், பொது ஜன பெரமு-னவின் நாடாளுமன்ற உறுப்பினரான ரியர் அட்மிரல் சரத்வீரசேகர தலைமையிலான தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக் , சந்திமவீரக்கொடி, பேராசிரியர் சன்ன ஜயசுமன, சாள்ஸ் நிர்மலநாதன், சம்பத் அத்துக்கொரல, யூ.கே.சுமித் உடுகும்புர, கலாநிதி. மேஜர் பிரதீப் உந்துகொட, மேஜர் சுதர்சன தெனிப்பிடிய, நிமல் பியதிஸ்ஸ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

அத்துடன் கடந்த ஆறாம் திகதி இந்தக்குழுவிற்கு ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவும் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.

# ஜனாதிபதிப பதவியை வெல்வதுடன் நாடாளுமன்றையும் கைப்பற்றுவோம்

## பெரமுனவின் செயலாளர் காரியவாசம் கருத்து




அடுத்த ஜனாதிபதிப் பதவியை வெல்வதுடன் நாடாளுமன்ற அதிகாரத் தையும் பொது ஜன பெரமுனவே கைப்பற்றும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சகார காரியவசம் தெரிவித்தார்.

மகிந்த தலையில் நேற்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுக்கூட் டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் ஒற்றையாட்சிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அதனைப் பாதுகாக்கும் கட்சியாக இருப்பது உங்களதும், எனதும், இந்த நாட்டு மக்களினதும் கட்சியாக இருக்கும் பொதுஜனபெரமுன தான். மீண்டும் எமது நாட்டுக்காக கடமையாற்றுவதற்கான காலம் பிறந்துள்ளது. அதற்காகமுழுவீச்சுடன்எழுவதற்கான சூழல்கள் ஏற்பட்டுள்ளன. எமது உறுப்பினர்கள் ஊடகங்களுக்குகடந்தகாலங்களில் பல்வேறுகருத்துக்களைக்கூறியுள்ளனர். எது எவ்வாறாக இருந்தாலும், எமது கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச அடுத்து எந் தத் தேர்தலையும்முகங்கொடுப்பதற்கு தயாராகஉள்ளோம்எனத்தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி, ஜனாதிபதி, நாடாளுமன்றம் இரண்டின்அதிகாரங்களையும் நாம் கைப்பற்றுவது உறுதி என்றும் குறிப்பிட்டுள்ளார் - என்றார்.

# சிறுபான்மைச் சமூகங்களின் சவால்களை தீர்ப்பதற்கு பொதுவான வரைவு அவசியம்

## அமைச்சர் நஸீர் அஹமட்



முஸ்லிம் சமூகத்தின் சமகால சவால்களை தீர்த்துவைக்கும் பொதுவான வரைவைத் தயாரிக்கும் தருணம் வந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், இனியும் தனித்தனியாகச் செயற்பட்டு சமூக உரிமைகளை வெல்லமுடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு ஜனாதிபதி முனைப்புடன் செயற்படுவதை தாம் அறிவதாக நஸீர் அஹமட்டின் ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இழக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை மீளப்பெறவும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகப் பொதுவான வரைவை தயாரிக்க வேண்டியுள்ளதுடன் வடக்கு, கிழக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் பறிபோன முஸ்லிம்களின் பூர்வீக நிலங்களை மீளப்பெற வேண்டியுள்ளதாகவும் அமைச்சரின் அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 வீத முஸ்லிம்கள் வாழ்கின்ற நிலையில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேச செயலகங்களில் 1.3 வீத காணிகளே வழங்கப்பட்டுள்ளன எனவும் அம்பாறை, திருகோணமலை உள்ளிட்ட வடக்கின் ஏனைய பகுதிகளிலும் இதே நிலைமை காணப்படுவதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய அறிக்கையில் சந்தேகங்கள், பாரிய ஆபத்துகள் காணப்படுவதாக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் சமகால சவால்கள் தொடர்பில் சமூக பிரதிநிதிகளிடம் ஒருமித்த கருத்து நிலவுவது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கருத்தொற்றுமையுடனும் போதிய ஆவணங்களுடனும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக சகல முஸ்லிம் தலைமைகளும் எம்.பிக்களும் தங்களது அரசியல் பேதங்களைப் புறந்தள்ளி ஒன்றுபட அழைப்பதாக அமைச்சரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒரே தாய்மொழியினராகிய தமிழரும் முஸ்லிம்களும் தொடர்ந்தும் பிணக்குகளுக்குள் சிக்கியிருக்கின்றமை சிறுபான்மை சமூகங்களை ஈடேற்றாது என்பதையே வரலாறு உணர்த்தியிருப்பதாக அமைச்சர் நஸீர் அஹமட் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(05)



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2023இல் வெளியிடப்பெற்றது.